# PIRITON

TRADE MARK

# Piriton INJECTION

TRADE MARK

*for parenteral antihistaminic therapy*

## INDICATIONS

**FOR DRAMATIC RESPONSE IN ALLERGIC DRUG REACTIONS**

***due to***

**PENICILLIN**

**AND OTHER ANTIBIOTICS**

**LIVER EXTRACTS**

**MERCURIAL DIURETICS**

**INSULIN**

**VITAMIN-B COMPLEX**

**VITAMIN $B_{12}$**

## COMPOSITION

Each c.c. of Injection of Piriton contains 10 mg. of Piriton (chlorpheniramine) maleate.

## THE PREVENTION OF PENICILLIN REACTIONS

Patients known or suspected to be sensitive to penicillin or other antibiotics, or who have an allergic history, should be given 10 mg. of Piriton Maleate prophylactically. This may be mixed in the same syringe with aqueous solutions of antibiotics, aqueous penicillin or aqueous procaine penicillin, and the injection given intra-muscularly in the usual manner. When oily solutions are used, Piriton Maleate may be given as a separate injection immediately prior to the administration of the antibiotic.

## THE TREATMENT OF PENICILLIN

# பாரத உபாக்யானம்.

## முதல்பாகம்.

---

நாராயண அய்யரவர்கள்
எழுதியது.

மதுரை, புஸ்தகவியாபாரம்
இ. மா, கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

---

ஜிஸ்தர் செய்தது]　　1929.　　[அணா 8.

Printed at
The Excelsior Press,
Madura.

# முகவுரை.

"பாரத உபாக்கியானம்" என்னும் பெயரிய இந்நூல் வியாச பாரதமென்கிற ஆழிய கடலினிடத்து அடங்கிக் கிடக்கின்ற அமுதமன்ன இதிகாசப் என்கிற இனிய கதைகளின் சாரங்களைத் தேவர்கள் தளராது முயன்று முன்னர்க் கடலைக்கடைந்து அமுதமெடுத்தாற்போன்று திரட்டி எடுத்து எளிய இனிய தமிழ்நடையிலும் இலகுவில் அறியும் சுருக்க முறையிலும் நமக்குப் போதிக்கத் தக்கதாகத் தந்த ஒரு சீரிய சிறிய நூலாகும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பழய இதிகாசக் கதைகளின் வரலாறுகளை எடுத்துப் போதிக்கின்றபோது இதிகாச மனைத்திலும் அதிகப் பாரமுள்ள இப் பாரதத்தின் கண் மாத்திரம் சிறிது சிரமமடைவார்கள் என்பது புனைந்துரையல்ல. இக்குறையை இந்நூல் நீக்கி மாணவர்கள் பண்டைக்கால வழக்க ஒழுக்க நேமநியமங்களை அத்தியாயம் அத்தியாயமாகப் பசுமரத்தாணி பதிந்தாங்குத் தம் மனத்துப் பதியுமாறு ஐயமறப் பாடங் கேட்டு மிக்க நுண்ணறிவு பெறவதோடு இதிகாச புராண இரகசியார்த்த நுட்பங்களைத்ரையும் மற்றைய மக்களும் பக்தியுடன் உய்த்துணர்ந் தொழுகுமாறு உண்மையில் உதவி புரியவும் கூடுமென்பது எமது துணிபு.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான்,

மதுரை.



# பாரத உபாக்கியானம்

## 1. சூதபுத்திரர் கதை

ஒரு காலத்தில் ரோமஹர்ஷணர் என்னும் ரிஷி ஒருவர் இருந்தார் அவர் புராணகதைகள் சொல்வதில் தேர்ந்தவர். புராண கதைகளையும் பழையகதைகளையும், கேட்பவர் மகிழ்ந்து புளகாங்கிதம் அடையும்படி அவர் பிரசங்கம் செய்வார். (ரோமஹர்ஷணர்,ரோமம் சிலிர்க்கக் கதைசொல்பவர்) ரோமஹர்ஷணருக்கு, ஒரு புத்திரர் இருந்தார். அவரும் பௌராணிகர்; அதாவது புராணப் பிரசங்கத்தில் தேர்ச்சிபெற்றவர். இவர் தம் தகப்பனைரைக் காட்டிலும் தேர்ந்தவர். இவர் சூத குலத்தவர். பிராமணஸ்திரீக்கும், க்ஷத்திரியனுக்கும், பிறந்தவன் சூதன். சூதகுலத்தில் பிறந்தமையால் சூதர் என்று இவர்க்குப் பெயர் வழங்கலாயிற்று. இவர் தகப்பனர், சூதபுராணிகர் என்று பிரசித்தி பெற்றிருந்தார். அவர் புத்திரராதலின், சூதபுத்திரர் என்னும் பெயர் இவர்க்கு வழங்கலாயிற்று.

சூதபுத்திரர் நைமிசாரண்யம் என்னும் காட்டிற்குச் சென்றார். அது ஓர் அழகான காடு. எங்கேபார்த்தாலும் குளிர்ந்த பூஞ்சோலைகளும்,

அமிர்தம்போன்ற தீர்த்தம் நிறைந்த தடாகங்க ளும் இருக்கும். அக்காட்டில் ஒரு சமயம் அநேக பிரமரிஷிகள் ஒரு யாகத்திற்காக வந்து கூடினுர் கள். ரிஷிக் கூட்டங்களில் முக்கியமானவரான சௌனகர், அந்த யாகத்தைச் செய்தார். அவர் பதினுயிரம் ரிஷிகளைக் காப்பாற்றி வந்தவர்; ஆத லால் குலபதி என்று பெயர்பெற்று விளங்கினுர். அவர், அந்த யாகத்தில் அநேகருக்குப் பாத்திரம் அறிந்து தானம் செய்தார்; அநேகம் பிராணிக ளுக்குத் திருப்திசெய்வித்தார். அந்த யாகத்திற்கு வந்திருந்த ரிஷிகளிடம் சூதபுத்திரர் சென்ருர். சூதபுத்திரர், சௌனகர் ஆச்ரமத்தைச் சேர்ந்து, அடக்கத்துடன் ரிஷிகளை வணங்கி, 'பிரம ரிஷி களே! அடியேன் பெரியோர்களாகிய உங்கள் தரி சனங்கண்டு பாக்கிய முள்ளவனுனேன்' என்ருர்.

சூதருடைய இனிய வசனங்கேட்டு நைமி ச்சாரணியத்தில் வசிப்பவராகிய ரிஷிகள், சந்தோ ஷம் அடைந்தார்கள். அவர்களும் அவரை வணங்கிக் கை கூப்பிக்கொண்டு, விசித்திர-விசித் திரமான கதைகளைக்கேட்டு ஆனந்தம் அடைய லாம் என்று கருதிச் சூழ்ந்து கொண்டார்கள். அவர், அவர்களை மதுரமான அழகிய சொற்க ளால் க்ஷேமம் விசாரித்தார். அவர்களும் அவ ருக்கு விசேஷ மரியாதைசெய்து, ஒரு திவ்யமான ஆசனத்தைக் காட்டினுர்கள்.

ரிஷிகள் யாவரும் உட்கார்ந்தபின், சூதபுத்திரர் அவர்கள் காட்டிய ஆசனத்தைப் பணிவுடன் அங்கீகரித்தார். அதில் சுகமாக வீற்றிருந்து அவர் இளைப்பாறினர்.

ஒரு ரிஷி:—சூதபுத்திரரே! நீர் எங்கிருந்து வருகிறீர்? இவ்வளவு காலம் நீர் எங்கே சஞ்சாரம் செய்தீர்?

சூதர்:—நான் பல தீர்த்தங்களும், க்ஷேத்திரங்களும் யாத்திரை செய்துகொண்டு வருகிறேன். பஞ்ச பாண்டவர்களும் துரியோதனன் முதலான நூறு பேர்களும் மற்றுமுள்ள அரசர்களும் சண்டைசெய்த இடத்திற்குப் போயிருந்தேன். அவர்களுடைய கதைகளை மஹாபாரதக் கதைகள் என்று சொல்லுகிறோம் அல்லவா? இவற்றையே வியாச மஹரிஷி, ஸ்ரீ மஹாபாரதம் என்னும் ஒரு பெரிய நூலாகச் செய்திருக்கிறார். இக்கதைகளையே ஜனமேஜயன் என்னும் அரசனுக்கு வைசம்பாயனர் சொன்னர். நான் கேட்டு ஆச்சரியம் அடைந்தேன். அக்கதைகள் நடந்த இடங்களைப்பார்க்க விரும்பி நான் பிரயாணமானேன். பார்த்துவிட்டு உங்களைத் தரிசனம் செய்ய விரும்பி இங்கே வந்துசேர்ந்தேன். பெருந்தொழிலும் தர்மமும் செய்யும் உங்களையெல்லாம் நான் எனது தெய்வமாகவே நினைக்கிறேன்.

ரிஷிகள்:—எல்லாராலும் கொண்டாடப்படுவெதும், சகல வேதசாஸ்திர நுட்பங்களையும் நன்ருக விளக்குவதும், சரித்திரம், நீதி, ஞானம் முதலான விஷயங்கள் அடங்கிய பொக்கிஷமாயிருப்பதுமான, ஸ்ரீமஹாபாரதத்தைக் கேட்க விரும்புகிரும்—என்ருர்கள்.

பேசுவதில் வல்லமையுடையவரான அந்தப் பௌராணிகர், முனிவர்களுடைய விரிவான சபையில் பாரதக் கதைகளைச் சொல்லத் தொடங்கினர்.

---

## 2. வியாசர் பாரதம் பாடியது

வேதவியாசமஹரிஷி, வேதத்தை வகுத்த பிறகு மஹாபாரதத்தைச் செய்தார். பாரதக் கதை உலகத்திலுள்ள பலகதைகளுக்கும்ஆதாரமானது. இக்கதையை நம் நாட்டில் அநேக கவிகள் சுருக்கமாகவும் விரிவாகவும் முன்னே பாடினுர்கள். பரந்த அறிவுள்ள மற்றும் சிலர் இப்போதும் இக்கதையை எழுதிவருகிருர்கள். இப்படியே இனிமேலும் பலர் சொல்லுவார்கள். இது படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கும், சீமான்களுக்கும், ஏழைகளுக்கும் பிரியமானது. இது நமது தேசத்திலும் தேசாந்தரங்களிலும் பலவேறு பாஷைகளில் வழங்கி வருகிறது.

ஆதியில் வியாசர், இக்கதையை ஸம்ஸ்கிருத பாஷையில் செய்தார். இந்தப் பாஷையை தேவ

பாஷை யென்றும் வடமொழியென்றும் சொல்லு கிறோம். அவர் பனிமலையான இமயமலையின் அடிவாரத்தில் ஒரு குகையிலிருந்தார்; குகைவீட் டில் தருப்பையைப் பரப்பினர் ; அதன்மேலிரு ந்து எல்லாவற்றையும் மனக்கண்ணாலே கண்டு ஆராய்ந்து, இப்பெருங்கதையை அருளிச் செய்தார். முற்காலத்து அரசியல் முறைகளும், ராஜ்ய தந்திரமும் அபிவிருத்தியும் நாகரிகமும் சீர்திருத்தமும் நியாயங்களும் இந்து சமய உண் மைகளும் வழக்கவொழுக்கங்களும் பழையகதை களும் கிளைக்கதைகளும் நுண்மையான பொருள் விசேஷங்களும் உலகநடையின் ஒழுங்கும் ஆச் சரியமான பலவேறு விஷயங்களும் வியாச ரது சித்திரமான மகாபாரதத்திலே காணப்படு கின்றன.

வியாசர் லோகோபகாரமாகப் பாரதத்தைச் செய்தருளினர். அவருடைய சிஷ்யரான வைசம் பாயனர், ஜனமேஜய ராஜாவும் ஆயிரக்கணக்கான பிராமணர்களும் கேட்டு மனங்குளிர்ந்து இன்பம் அடைந்து நல்வழிப்படும் வண்ணம், பாரதக் கதையைச் சொல்லலானர்.

பரதவம்சத்தைக் குறித்த சரித்திரம் பாரதம். பஞ்சபாண்டவர்களும் துரியோதனன் முதலான நூற்றுவரும் பரதவம்சத்தைச் சேர்ந்தவர்கள். பாரதத்தில், பாண்டவர்களுடைய நல்ல நடவடிக்

கைகளையும் துரியோதனன் முதலான பேர்களு டைய கெட்ட நடவடிக்கைகளையும் வியாசர் சொல் லுகிறார். முக்கியமான இக் கதையோடு அநேக நீதிக்கதைகளும் கிளைக்கதைகளும் கலந்திருக்கின் றன. இவ்வளவு பெரிய கிரந்தம் உலகத்தில் எங்கு மில்லை. 'ஆனால் இதை எழுதுகிறவர் யார்?' என்று வியாசர் கவலையடைந்தார்.

பிறகு அவர், ஞானியாதலால் மனக்கவலை யைக் கணத்தில் மாற்றிவிட்டு, இந்த நூலை எழுது வதற்காகக் கணபதியைத் தியானம் செய்தார். தியா னித்தவுடன் அன்பர் அபீஷ்டத்தை நிறைவேற் றும் விநாயகர், வியாஸர் இருந்த இடத்திற்கு எழுந்தருளினார். வியாஸர் அவருக்குப் பூஜை செய்தார்.

வியாஸர்:—கணநாதா! அடியேன் மனத்தில் முன்னமே அமைக்கப்பட்ட இந்தப் பாரதத்தை இப்போது சொல்லுகிறேன்; தாங்கள் எழுத வேண்டும்.

விநாயகர்:—வியாஸரது பிரார்த்தனைக் கிரங்கி "முனிவரே! எழுதும்போது என்னுடைய எழுது கோல் ஒரு நிமிஷமாவது நில்லாமலிருக்கவேண் டும்; அப்போதுதான் நான் எழுதிக்கொண்டிருப் பேன். மத்தியில் எழுதுகோல் ஒரு நிமிஷமா வது நிற்கும்படி நேர்ந்தால் நானும் எழுதுவதை நிறுத்தி விடுவேன்" என்றார்.

**வியாஸர்:**—"அப்படியானல், ஸ்வாமி! எந்த இடத்திலும் நீர் அறிந்துகொண்டே எழுதவேண்டும்.

விநாயகர் சம்மதித்து அதிவேகமாக எழுதத் தொடங்கினர். மஹரிஷியும் விளையாட்டாய்க் கவி பாடிக்கொண்டே வந்து இடையிடையே பொருள் விளங்காத பாகமாகிய முடிச்சை அமைத்து விடுவார். சொல்லும் பொருளும் வெளிப்படையாக இராத வியாஸரது சித்திரத்தின் பாகத்தைக் குறித்து விநாயகர் சற்றுநேரம் சிந்தித்து ஆராய்ந்து கொண்டிருக்குமளவில், முனிவர் வேறு பல சுலோகங்களைச் செய்து மனத்தில் அமைத்துக் கொள்வார். இவ்வண்ணம் இனிமையும் பரிசுத்தமுமான சுவையுடன் கூடிய பாரதப் பெருங் கதையை, வியாஸர் சொல்லக் கணபதி எழுதினர்.

இவ்வரலாற்றைப் பிற்காலத்தார், "வியாஸ மஹரிஷி மஹாபாரதம் சொன்னகாலத்தில், விநாயகக்கடவுள், மஹாமேருமலையை ஏடாகவும், தமது கொம்பை எழுத்தாணியாகவும் கொண்டு எழுதியருளினர்" என்று சிறிது மாற்றிக்கூறுவாராயினர்.

---

## 3. பாண்டவரும் கௌரவரும்

தருமபுத்திரர் முதலான பாண்டவர்களும், துரியோதனன் முதலான கௌரவர்களும் பரதவம்சத்தைச்சேர்ந்தவர்கள். பாண்டவர்கள் தர்மத்திற்

கும் கௌரவர் அதர்மத்திற்கும் பேர்போனவர்கள். இவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. தருமபுத்திரர் முதலிய பாண்டவர்களுக்கும் துரியோதனன் முதலிய கௌரவர்களுக்கும் நடந்த சண்டையை, "பாரத யுத்தம்" என்று சொல்லுகிறோம். இந்த யுத்தம் குருக்ஷேத்திரம் என்னுமிடத்தில் நடந்தது. இதில் பாண்டவர்கள் ஜயம் அடைந்தார்கள்.

தர்மபுத்திரர் நல்லவர்; துரியோதனன் கெட்டவன். தர்மபுத்திரரும் அவர் தம்பிமாரும் பாண்டு என்னும் அரசனுடைய புத்திரர்; ஆதலால் பாண்டவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். துரியோதனனும் அவன் தம்பியரும், திருதராஷ்டிர மகாராஜாவின் புத்திரர். திருதராஷ்டிரனும் பாண்டுவும் சகோதரர்கள். திருதராஷ்டிரன், தமையன்; பாண்டு தம்பி. திருதராஷ்டிரன் பிறவிக்குருடன். பாண்டு, மிகுந்த சக்திமான். அவன் அநேக நாடுகளை ஜயித்தான். அவன் காட்டில் வேட்டையாடப் போன ஒரு சமயம் மான் வடிவமாயிருந்த பெரியார் ஒருவரை அம்பினால் அடித்துவிட்டான். அதனால் அவன் அவருடைய சாபமடைந்து இறந்தான். பாண்டவர்கள் அந்தக்காட்டில் பிறந்தனர்; அங்கேயே ஒழுங்காகக் கல்வி கற்றனர்; ஆசாரவிதிகளும் கற்பிக்கப்பெற்றனர். பாண்டுவின் இளைய மனைவியான மாத்திரியும்

அவனோடு அனல் முழுகி இறந்தாள். பாண்டவர்கள், பாண்டுவின் மூத்தமனைவியான குந்தியால் காப்பாற்றப்பட்டுப் பரிசுத்தமான காடுகளிலும் அழகான ஆச்ரமங்களிலும் ரிஷி புத்திரரோடு வளர்ந்தார்கள்.

பாண்டுவின் மரணத்திற்குப்பின், பாலர்களும் பிரமசாரிகளுமாகிய அந்த இளைஞர்கள், பெரியதகப்பனுரான திருதராஷ்டிரனிடம் சென்றார்கள். அவன் தன் தம்பி புத்திரர்களான அவர்களைத் தன்புத்திரர்களைப்போலவே காப்பாற்றி வந்தான். துரியோதனனும் அவனைச்சேர்ந்தவர்களும் அவர்களைச் சகோதரர்கள் என்றே நினைத்தார்கள். பாண்டவர், கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாய், வேதசாஸ்திரங்களை யெல்லாம் ஓதியுணர்ந்து யாரிடத்திலும் பயமில்லாதவர்களாயிருந்தனர். தர்மபுத்திரன், பீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன். என்று இவர்கள் ஐந்து பேர். தர்மபுத்திரர், மகாதர்மப்பிரபு. பீமசேனன், மஹா பலசாலி. அர்ச்சுனன், அழகிற்கும் ஆண்மைக்கும் பேர்போனவன். நகுலனும் சகாதேவனும், பணிவும் பொறுமையும் விநயமுமுள்ளவர்கள்.

அர்ச்சுனனுடைய சாமர்த்தியத்தால், பாண்டவர்கள், திரௌபதியைக் கலியாணம் செய்து கொண்டார்கள்; எல்லா அரசர்களையும் ஜயித்து

ராஜ சூயம் என்னும் பெரிய யாகத்தைச் செய்தார்கள்.

துரியோதனன் கோபக்காரன்; தன் ஆசையை அடக்க வகையறியாதவன்; மனம்போன போக்கெல்லாம் போகவிரும்பியவன். அவன் திருதராஷ்டிரமகாராஜனுடைய மூத்தகுமாரன்; செல்வமகன். அவன்தம்பி துச்சாசனன் முதலானபேர்கள் துஷ்டர்கள்; அவன் மாமனுன சகுனி, கெட்டசெய்கையிலே தேர்ச்சிபெற்றவன். அவன் அன்பனுன கர்ணனும், அவனைத்தடுத்து நல்வழிப்படுத்த முயல்வதில்லை. நிரம்பிய பாண்டவர்களுடைய அளவற்ற ஐசுவரியத்தைக்கண்ட துரியோதனன் அவர்களிடம் பொறாமையும் கோபமும் கொண்டான்.

பின்பு புத்திரனிடத்து அன்புள்ள திருதராஷ்டிரனுடைய அனுமதியின்படி, சகுனியும் தர்மபுத்திரரும் சூதாட்டம் ஆட ஆரம்பித்தார்கள். மோசமான சூதாட்டத்தில், தர்மபுத்திரர் நாடுநகரங்களை யெல்லாம் இழந்தார். பின் பாண்டவர்கள் வனவாசம் செய்தார்கள். அவர்களுடைய மெய் அன்பரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் கௌரவர்களைச் சமாதானம் செய்யமுயன்ருர். காரியம் நிறைவேறவில்லை. முடிவில் போர் மூண்டது. பாண்டவர்களும் கௌரவர்களும் சேனைகளோடு குருக்ஷேத்திரத்தில் கை கலந்தார்கள். கௌரவர் தோல்வியுற்று நாசம் அடைந்தனர்.

## 4. ஸமந்த பஞ்சகம்

சூதர் தமது யாத்திரையில் தாம் கண்டறிந்த அற்புதங்களை, நைமிசாரணியத்து ரிஷிகளுக்குச் சுருக்கமாகச் சொன்னார்; தாம் பிரயாணத்தில் கேள்விப்பட்ட அழகான கதைகளையும் சொன்னார்; அப்போது ஸமந்தபஞ்சகம் என்ற ஒரு க்ஷேத்திரத்தைப்பற்றி விசேஷமாக எடுத்துச் சொன்னார்;

ஸூதர் சொல்கிறார்:—

அந்தணர்களே! கேளுங்கள். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என யுகம் நால்வகைப்படும். முதல் யுகமான கிருதயுகத்தில் ஜாதிவிஷயமான சச்சரவுகள் இல்லை. எல்லோரும் ஒற்றுமையாயிருந்தார்கள். கடையுகமான கலியுகத்தில்தான் சச்சரவுகளும் வித்தியாசங்களும் அதிகம். ஆனால் இடை யுகங்களிலேயே சச்சரவுகள் ஆரம்பித்தன. அரசர்களான க்ஷத்திரிய ஜாதியார் நாட்டிற்கு வேலிபோன்றவர்கள்.

திரேதாயுகம், துவாபரயுகம் இவ்விரண்டின் சந்தியில், க்ஷத்திரியர் மகா பராக்கிரமமுள்ளவர்களாயிருந்தார்கள். பலம் நல்லது தான். பராக்கிரமும் அவசியமானது தான். ஆனால் பலத்தை நீதியைக் காப்பாற்றுவதற்காகவே உபயோகிக்க வேண்டும் அல்லவா? தோளில் பலமுள்ளவர்கள் நெஞ்சில் அருள் உள்ளவர்களாயிருக்கவேண்டும்

அல்லவா? அப்படிப் பட்டவர்களுக்கல்லவா தெய்வசகாயமும் மனிதசகாயமும் உண்டாகும்? ஆனால் பலசாலிகளான க்ஷத்திரியர்கள் பரமதுஷ்டர்களாக இருந்தார்கள்; சாதுக்களைத் தொந்தரவு செய்தார்கள். ஏழை அழுதகண்ணீர் கூரிய வாள் அன்றோ?

க்ஷத்திரியர்களை அடக்குவதற்கு ஒருவர் தோன்றினார். இவர் எவ்வுயிர்க்கும் இரங்கும் அந்தணர் குலத்தில் பிறந்தவர். ஆயினும் இவர் மகா வீரராயிருந்தார். கோபத்தால் தூண்டப்பட்டு, துஷ்டர்களை அடிக்கடி வதம் செய்தார். தீமையை யழிப்பதில் இவர் நெருப்பாயிருந்தார். இவர் பெயர் பரசுராமர். பரசுராமர் தம்முடைய தோள்வலியால் க்ஷத்திரியர்களை அழித்து ஸமந்த பஞ்சகம் என்னும் இடத்தில் ஐந்து ரத்த மடுக்களை உண்டாக்கினார். அந்த ரத்தத்தினாலேயே பிதிர்க்களுக்குத் தர்ப்பணம் செய்தார்.

அவர் பிதிர்க்கள் பரசுராமரிடத்திற்கு வந்தார்கள். பரசுராமர் தம் கண்களிக்கப் பிதிர்க்களைக் கண்டார்; செவிகுளிர அவர்கள் பேசுவதைக் கேட்டார். இவருடைய பிதிர் பக்தியை அவர்கள் கொண்டாடினார்கள்; இவருடைய சக்தியையும் தைரிய சாகசங்களையும் வியந்தார்கள். ஆனால் அன்பிலும் அருளிலுமே அனைவர்க்கும் விடுதலை யுண்டு என்றும் பகையாகிய தீ அன்பு என்னும்

நீராலேதான் அணையும் என்றும் பிதிர்க்கள் பரசுராமருக்குச் சொன்னார்கள்.

பரசுராமர் பிதிர்க்களுடைய அன்பை எண்ணி மகிழ்ந்தார்; அவர்களுடைய அநுக்கிரகத்தைப் பெறுவதற்குத் தம்மிடம் தகுதியிருக்கிறதோ என்று சந்தேகித்தார். கோபம் தமது அறிவைப் புகைத்துவிட்டதென்றும், அதனால் தாம் உண்மையைக் காணமல் மயங்கவேண்டி வந்ததென்றும், அவர் உணர்ந்தார்; தாம் க்ஷத்திரியரை அழித்த பாவத்திற்காக அநுதாபப்பட்டார்; அன்பே பாபத்திற்கும் தீவினைக்கும் அருமருந்தென்று கண்டார். கோபம், பாபமென்று தெளிந்து, உடனே, அவர் சாந்தராயினர். பரசுராமருடைய ஐந்து ரத்த மடுக்களிருந்த தேசமே ஸமந்த பஞ்சகமென்னும்க்ஷேத்திரமென்று சொல்லப்படுகின்றது. இவ்விடத்திலேதான் கௌரவ சேனைக்கும் பாண்டவ சேனைக்கும் யுத்தம் உண்டாயிற்று. ஸமந்த பஞ்சகம் நாடெங்கும் பிரசித்தி பெற்றிருக்கிறது. இதை ரிஷிகள் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள்.

---

## 5. ஓர் உத்தம சீஷன்

அயோதர் என்பவர் ஒரு ரிஷி. அவருக்கு மூன்று சீஷ்யர்கள் இருந்தார்கள். அவர்களில் ஆருணி என்பவன் ஒருவன். அவன் பாஞ்சால

தேசத்தான்; குருகுல வாசம் செய்து கல்விகற்று வந்தான்.

ஒரு நாள் அயோதர் ஆருணியைப் பார்த்து, "குழந்தாய்! நீ போய்க் கழனியின் மடையை அடை" என்று சொல்லி அனுப்பினர்.

ஆருணியால் மடையை அடைக்கமுடியவில்லை. அவன் பலதடவை முயன்று பார்த்தான்; கடைசியாக, "இருக்கட்டும் இவ்வாறுசெய்வேன்" என்று ஓர் உபாயம் செய்தான். அவன் கழனியின் மடையில் குறுக்கே படுத்துக்கொண்டான். தண்ணீர் போகாமல் நின்று விட்டது.

குரு கொஞ்ச நேரம் கழித்து மற்ற இரண்டு சிஷ்யர்களையும் நோக்கி, "பாஞ்சால தேசத்தான் எங்கே போனன்?" என்று கேட்டார். அவர்கள் " 'போ, கழனியின் மடையை அடை' என்று ஏவினீர்களே" என்று மறுமொழி கூறினர். "ஆனல் அவன் போன இடத்திற்கே நாம் எல்லோரும் போவோம். மடையை அடைத்துவர ஏன் இவ்வளவு தாமதம்?" என்று கூறிக் குரு சிஷ்யர்களுடன் புறப்பட்டார்.

கழனியின் அருகே சென்று, "ஆருணியே! எங்கிருக்கிருய்?" என்று சிஷ்யர்கள் கூவினர்கள். "குழந்தாய்! மடையை அடைத்துவருவதற்கு ஏன் இவ்வளவுநேரம்? சீக்கிரம் வா!" என்று குரு

அழைத்தார். ஒருவரும் ஆருணியைப் பார்க்க வில்லே.

அவர்கள் திகைத்து நிற்கையில், ஆருணி உபாத்தியாயருடைய குரலைக்கேட்டு கழனி மடையினின்றும் எழுந்து வந்தான். உடம்பெல்லாம் சேருயிருந்தது. "வெளியே போகும் ஜலம் கட்டுப்படாமலிருந்ததால் நான் மடையில் படுத்திருந்தேன். தேவரீர் சத்தத்தைக் கேட்டுத்தான் வந்தேன்" என்று குருவை நமஸ்கரித்தான்.

குரு அத்யாச்சரியம் அடைந்தார்; ஆருணியைத் தழுவிக்கொண்டு "உன்னைப்போல் கீழ்ப்படிதலுள்ள சீஷனை நான் பார்த்ததில்லை. பணிவே உலகத்தை ஆளும். நீ பணிவினால் புகழ் பெறுவாய். பொறுமையால் எல்லாவேத சாஸ்திரங்களையும் ஓதி உணர்வாய்" என்று அநுக்கிரகித்தார்.

---

## 6. உபமன்யு சரிதம்

அயோதருக்கு ஆருணியைத்தவிர உபமன்யு என்றும் பைதன் என்றும் இரண்டு சிஷ்யர்கள் இருந்தார்கள். அயோதர் ஒரு நாள் உபமன்யுவைப்பார்த்து, "குழந்தாய்! பசுக்களை மேய்" என்று கட்டளை யிட்டார். அவன் பசுக்களைப் பகலில்மேய்த்துச் சாய்ங்காலம் குருவின் வீடுசேர்ந்து அவரை நமஸ்கரிப்பான்.

அவன் புஷ்டியாயிருப்பதை உபாத்தியாயர் கண்டு "எதைக்கொண்டு நீ ஜீவனம் செய்கிறாய்?" என்று கேட்டார்.

உபம:—சுவாமி! பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்கிறேன்.

குரு:—இனி, பிக்ஷையை எனக்குக் காண்பியாமல் உபயோகிக்க வேண்டாம்.

உபம:—"அப்படியே" என்று சொல்லிப் பிக்ஷை யெடுத்துவந்து உபாத்தியாயருக்குக் காண்பித்தான். உபாத்தியாயர் பிக்ஷை முழுவதையும் வாங்கிக்கொண்டார். அவன் வழக்கம்போல் மாடு மேய்த்துவந்தான். உபாத்தியாயர் அப்படிச்செய்து வந்தும் அவன் புஷ்டியாகவே இருக்கக்கண்டு "குழந்தாய்! உபமன்யு! உன் பிக்ஷைமுழுவதும் மிச்சமின்றி நான் எடுத்துக்கொள்ளுகிறேன். எதனால் இப்போது நீ ஜீவனம் செய்கிறாய்?" என்று கேட்டார்.

உபம:—சுவாமி! இந்தப்பசுக்களின் பாலால் ஜீவனம் செய்கிறேன்.

குரு:—இது சரியன்று. பாலை உபயோகப் படுத்த நான் அநுமதி தரவில்லையே.

உபமன்யு பின்னால் பால் அருந்துவதையும் விட்டுவிட்டான். அப்பால் பசியுடன் வருத்தப்பட்டுக்கொண்டே பலவீனனாய் மாடுகளை மேய்த்து

வருகையில் ஒரு நாள் ஒரு கிணற்றில் விழுந்து விட்டான்.

சீஷனைக் காணுமல் உபாத்தியாயர் மற்றவர்களை விசாரித்தார். "நான் உபமன்யுவை எல்லா விஷயங்களிலும் பரிசோதித்து விட்டேன். அவன் கோபித்துக்கொண்டுதான் வராமல் இருக்கிருனே?" என்று நினைத்தார். பிறகு குருவும் மற்ற சீஷர்களும் உபமன்யுவைத் தேடப் புறப்பட்டார்கள். காடெங்கும் தேடி அலைந்து "அப்பா! உபமன்யுவே! எங்கே யிருக்கிருய்?" என்று குரு சத்தமிட்டார். "இதோ இந்தக் கிணற்றில் விழுந்து விட்டேன்" என்று ஈனஸ்வரத்தில் மறுமொழி கிடைத்தது. பின் உபமன்யு கிணற்றினின்றும் வெளியே எடுக்கப்பட்டான். கிணற்றில் ஜலம் கொஞ்சமாக இருந்ததால் அவனுக்கு அபாயம் ஏற்படவில்லை. ஆனல் உடம்பெல்லாம் காயமுண்டாயது.

உபாத்தியாயர் அவனைத் தழுவிக்கொண்டு "அப்பா! நீயே சரியான சிஷ்யன். குருகுல வாசத்தில் ஏற்படும் கஷ்டங்களைப் பொருட்படுத்த வில்லை. இந்த மன உறுதி உனக்கு உலகத்தில் விசேஷ நன்மையைக் கொடுக்கும். உன் குருபக்தியே பக்தி. நீ வித்தையையும் ஒழுக்கத்தையும் அடைந்து பெருவாழ்வு வாழ்வாயாக!" என்று ஆசீர்வதித்தார்.

## 7. குரு சிஷ்யக் கிரமம்

அயோதர் மூன்றாவது சிஷ்யனான பைதனை நோக்கி, "குழந்தாய்! நீ என் இல்லத்தில் பணிவிடை செய்துகொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நீ கற்கும் கல்வியின் பயன் உனக்கு உண்டாகும்" என்று சொன்னார். பைதன் அவ்வண்ணமே நீண்டகாலம் பணிவிடை செய்துகொண்டு குருகுலவாசம் செய்தான்.

அவன் குருவிற்குச் சகலவித கைங்கர்யமும் செய்தான்; அவர் வீட்டில் தோட்டிபோல் உழைத்துப் பசி தாக முதலிய கஷ்டங்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டு குருவின் கட்டளைகளை அவர் மனமகிழும்படி நிறைவேற்றிவந்தான். குருவிற்கு நாளடைவில் அவனிடம் சந்தோஷம் உண்டாயிற்று. உண்மையான கைங்கரியத்தால் தன்னை உவப்பித்து வந்த அவனுக்கு அவர் தமது அறிவாகிய பொக்கிஷத்தைத் திறந்துவைத்தார். அவனும் பசியுள்ளவன், சோற்றைக் கண்டதுபோலக் கல்விப் பயிற்சியில் ஆசை மிகுந்தவனாய்க் கசடறக் கற்று மகா மேதாவியானான். குருகுலவாசம் முடிந்ததும் அவன் அழகிலும் குணத்திலும் அறிவிலும் சிறந்த ஒரு பெண்ணரசியைக் கல்யாணம் செய்துகொண்டு கிரஹஸ்தனானான்.

பைதனுக்கும் மூன்று சிஷ்யர்கள் இருந்தார்கள். அவன் சிஷ்யர்களை வேலைசெய்ய ஏவுவதே

இல்லை; அவர்களிடம் கைங்கரியத்தைத் தனக் கென்று விரும்புவதே இல்லை. அவன் குருகுல வாசத்தின் கஷ்டங்களை அறிந்தவன். ஆகையால் சிஷ்யர்களைக் கஷ்டப்படுத்துவதே இல்லை.

பைதன் ஒரு யாகத்திற்குப் போகவேண்டிய தாய் இருந்தது. புறப்படுகையில் உதங்கன் என் னும் சிஷ்யனைப்பார்த்து, "நீ நம்முடைய வீட்டுக் காரியங்களைச் செவ்வையாய்ப் பார்த்து வரவேண் டும்" என்று கட்டளையிட்டார்.

பைதன் தூரதேசம் சென்ற பிறகு உதங்கன் குருவின் நியமனப்படி நடந்துவந்தான். அவன் குருபத்தினியைத் தாயாராகக் கருதி வழிபட்டு வந் தான். வெகுகாலம் சென்றபின் உபாத்தியாயன் வீடுவந்து சேர்ந்தான்; சீஷனது ஒழுக்கத்தை மெச்சினன். குருவிற்கும் சிஷ்யனுக்கும் சினேகம் அபிவிருத்தி யடைந்தது.

குருகுலவாசம் முடிந்து சிஷ்யன் குருவை விட்டுப் பிரிகையில் "குருதக்ஷிணை கொடுக்கவிரும்பு கின்றேன். உங்களுக்கு வேண்டியதைக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் கட்டளையிடுங் கள்" என்று வினயத்தோடு விண்ணப்பஞ் செய் தான். குருவிற்கும் தக்ஷிணை வாங்குவதில் இஷ்ட மில்லை. ஆகிலும், பலமுறை வேண்டும் சிஷ் யனை நோக்கிப் பைதன் "என்பத்தினி விரும்புவ

தைத் தெரிந்து அவளுக்குப் பிரியமானதைக் கொடு" என்று சொன்னான்.

சிஷ்யன் குருபத்தினியை வணங்கி "அம்மா! உமக்குப் பிரியமானதைக் கொடுத்து என் கடனைத் தீர்க்கவிரும்புகிறேன். நீர் அக்ஞாபிக்கவேண்டும்" என்று கேட்டான். உபாத்தியாய பத்தினி "உதங்கா நீ பௌஷ்ய ராஜாவின் பத்தினியின் குண்டலங்களை எனக்குக் கொண்டுவந்து கொடு" என்று கட்டளையிட்டாள்.

உதங்கன் பௌஷ்யனிடம் சென்று "நான் பிராமணன்; உன்னிடம் யாசிப்பதற்கு வந்திருக்கிறேன்" என்றான். விஷயம் அறிந்த அரசன் "வேண்டியதை என் பத்தினியிடம் பெற்றுக் கொள்" என்றான். பிராமணன் அரசியைக் கண்டு குண்டலங்களைப் பெற்றுக்கொண்டான்.

திரும்புகையில் உதங்கன் குண்டலங்களைக் கீழே வைக்கும்படி நேர்ந்தது. அப்பொழுது தக்ஷகன் என்னும் ஸர்ப்பம் அக்குண்டலங்களை எடுத்துக்கொண்டு ஒரு பெரிய வளைக்குள் புகுந்து மறைந்தது. அவன் தக்ஷகனைத்தேடி நாகலோகம் சென்றான்; அங்கே ஒரு பெரியவரின் அருளால் அக்குண்டலங்களைத் திரும்பப்பெற்றான். பின் அவன் ஒரு மாயக் குதிரையைக்கண்டு அதன் மேல் ஏறிக்கொண்டு உபாத்தியாயரின் வீட்டைஅடைந்தான்.குருபத்தினி "உதங்கா!குண்

டலங்களைக் குறித்து மிகவும் சந்தோஷமடைகிறேன். உனக்கு நல்வரவு! ஆனால் ஏன் காலதாமதம் ஆயிற்று?" என்றுவினவினாள். உதங்கன் தக்ஷகன் செய்த இடையூற்றைச் சொன்னான். பிறகு அவன் குருவின் அநுமதியும் ஆசியும் பெற்றுத் தன் ஊருக்குத் திரும்பினான்.

---

## 8. அன்பின் வலிமை

முற்காலத்தில் ஸ்தூலகேசர் என்று பெயர் பெற்ற ஒரு மஹரிஷி இருந்தார். ஒருநாள் அவர் தம் ஆச்ரமத்திற்குச் சமீபத்தில் ஒரு அநாதைப் பெண் குழந்தையைக் கண்டார். எல்லாப் பிராணிகளிடத்தும் அன்புள்ள அவர் அக்குழந்தைக்குப் பிரமத்வரை யென்று நாமகரணம் செய்து தம் புத்திரியாகவே வளர்த்து வந்தார். அப்பெண் நல்ல சுபாவமும் அழகும் குணங்களும் உள்ளவளாய் விளங்கினாள்.

பிரமத்வரையை, தர்ம சொரூபியான குரு என்பவர் கல்யாணம் செய்துகொள்ள விரும்பி ஸ்தூலகேசரிடம் அக்கன்னிகையை யாசித்தார். பின்கன்னிகாதான முஹூர்த்தமும் நிச்சயிக்கப்பட்டது. சில நாட்களுக்குப்பின், அக்கன்னிகைதோழிகளோடு காட்டில் விளையாடப் போனாள். அங்கு அவள், குறுக்கே நீளத்தில் படுத்திருந்த பாம்பு

ஒன்றைப் பாராமல்மிதித்து விட்டாள். அந்தவிஷ ஸர்ப்பம் அப்பெண்ணரசியின் மிருதுவான சரீரத்தில் தன் கொடிய பற்களை நன்ருகப் பதித்தது. அவள் நிறம் மாறி ஒளிகுன்றிப் பிரக்ஞை தப்பி, திடீரென்று பூமியில் விழுந்தாள். கொஞ்ச நேரத்தில் அவளுக்கு உயிர் போய்விட்டது. பூமியில் விழுந்து துடிக்கும்போது அவள் பிதாவும் பிறரும் பார்த்தார்கள். பிறகு குரு முதலானவர்களும் வந்தார்கள்.

நிலத்தில் தூங்கினவள் போல அந்த நிலமையிலும் அழகாயிருந்த அவளைப்பார்த்து எல்லோரும் பரவசமாகிக் கண்ணீர் விட்டழுதார்கள். குருவோ மிகுந்த துக்கத்துடன் யாருமில்லாத காட்டிற்குள் சென்று வாய்விட்டுக் கதறினர்; பிரமத்வரையை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தார். முடிவில் தீனமாக அழுதுகொண்டு "பிரமத்வரை என் பிராணனை அபஹரிப்பவள்போல் பூமியில் படுத்திருக்கிருள். எனக்கு இதற்கு மேற்பட்ட துக்கம் என்ன இருக்கிறது? நான் தவங்கிடந்து தானங்கொடுத்து குருசிச்ருஷை செம்மையாகச் செய்தவனுக இருந்தால் என் பிரியை இப்பொழுது உயிர் பெற்று உறங்கி விழித்தவள் போல எழுந்திருக்கட்டும். லோக நாயகரும் எங்கும் நிறைந்தவருமான ஸ்ரீ கிருஷ்ண பகவான் திருவடிகளில் எனக்கு உறுதியான பக்தியும் விச்

வாசமும் இருக்குமானல் என் தலைவி ஜீவிக்கட்டும்” என்று சிந்தை செய்தார்.

அப்பொழுது குருவின் முன்பாக ஒரு தேவ தூதன் தோன்றினன். அவன் முகத்தில் ஞான ஒளி வீசியது. அவன் கண்களில் கருணை ததும்பியது. அவன் “குருவே! பாக்கியமில்லாத இக் கன்னிகைக்கு உனது ஆயுளில் ஒரு பாதியைக் கொடுத்தால் இவள் உயிர் பெற்று எழுந்திருப்பாள்” என்ருன்.

குரு “தேவ சிரேஷ்டனே! நான் என் ஆயுளில் பாதியை மனப்பூர்வமாய்க் கொடுக்கிறேன். என் காதலி எழுந்திருந்தாற்போதும்” என்ருர்.

தேவர்களுடைய ஆணையால் குருவின் அழகான பாரியை, மெய்யன்பனது ஆயுளின் ஒரு பாதியைக் கொண்டு மீண்டும் உயிர்த்தெழுந்து குருவை நோக்கி இளநகை அரும்பினுள்.

பிறகு குறித்த தினத்தில் குருவுக்கும் பிரமத்வரைக்கும் விவாக மஹோற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

---

## 9. தீயார் சிநேகம்

அக்கினி, ஒரு காலத்தில் ஒரு துஷ்டனுன ராக்ஷஸனைக் கண்டது.

அக்கினி:—ராக்ஷஸா! நீ எங்கே போகிருய்?

ராக்ஷஸன்:—நான் பிருகு முனிவரின் ஆச்ர மம் போகிறேன்.

அக்கினி:—ஏன் அங்குப் போகிறாய்? அங்கே உனக்கு என்ன அலுவல்?

ராக்ஷஸன்:—பிருகு முனிவரின் புகழ்பெற்ற மனைவியிருக்கிறாளே, அவள் பெயர் என்ன?

அக்கினி:—புலோமை. அவள் இப்போது கர்ப்பமாயிருக்கிறாள். நீ ஏன் அவளைப்பற்றி இப்போது விசாரிக்கிறாய்?

ராக்ஷஸன்:—சிறந்த அழகுள்ள புலோமையை நானே விவாகம் செய்துகொள்ள விரும்பியிருந் தேன். பராக்கிரமசாலியான நான் அவளை அடிக் கடி மறைந்து நின்று பார்க்கப்போவது வழக்கம். அப்பொழுது அவள் குழந்தை. ஒரு நாள் அவள் அழுதுகொண்டிருந்தாள். அவள் பிதா அப் போது 'ராக்ஷஸா! இவளைப் பிடித்துக்கொள்' என்றுசொன்னான். எனக்குச் சந்தோஷமுண்டாய் விட்டது. அங்கு மறைந்திருந்த நான் ஒரே புத் திக்காரனாதலால் புலோமையின் தகப்பன் சொன் னதைக் கேட்டு அன்று முதல் அந்தச் சிறுமியை என் மனைவியாகவே நினைத்திருக்கிறேன்

அக்கினி, சந்தோஷத்தால் ஜ்வலித்தது. "அப்பா, ராக்ஷஸா! அவளுடைய பிதா சாஸ் திரப் பிரகாரம் அப்பெண்ணரசைப் பிருகு முனி

வருக்கு விவாகம்செய்து கொடுத்தாரே; நான் அதற்குச் சாக்ஷியல்லவா ?

ராக்ஷஸன்:—அவள் பிதா பைத்தியக்காரன்; பின்புத்திக்காரன்; முதல் முதல் எனக்கு வாக்குக் கொடுத்தான்; பிறகு பிருகுவுக்கு மணம் செய்து கொடுத்தான். அக்கினியே நீ இப்போது எனக்கு உபகாரம் செய்யவேண்டும். நான் உன்னை இப்போது கேட்கிறேன். இவள் யாருக்கு உரிய பத்தினி ? யார் அவளுக்கு ஏற்ற நாதன் ? எனக்குச் சொல். நான் தானே இந்தச் சிறந்த பெண்ணை முதலில் மனைவியாக வரித்தேன். பொய்யனாகிய இவள் பிதா இவளைப் பிருகுவுக்குக் கொடுத்தான். இதை நான் ஒப்பவில்லை. என் மனைவியைப் பிருகு அடைந்ததில் எனக்கு உண்டான கோபம் என் நெஞ்சைச் சுடுகிறது. நெருப்பே! நீயே என் நெஞ்சில் வாடாத கோபமாய் ஜ்வலித்து எல்லாவற்றையும் அறிகிறாய் அல்லவா ? நீ எப்படி பிருகுவின் விவாகத்திற்குச் சாக்ஷியா யிருக்கலாம் ? நான் இவளை ஆச்ரமத்திலிருந்து இப்போது கொண்டுபோக விரும்புகிறேன்.

ராக்ஷஸன் இப்படி கடல்மடைதிறந்ததுபோலப் பேசினான். இவனது வாக்குவன்மையால் அக்கினி வசீகரிக்கப்பட்டது. அக்கினிக்கும் துஷ்ட ராக்ஷஸனுக்கும் சிநேகம் உண்டாயிற்று.

அக்கினி:—நண்பனே! இந்தப் புலோமை முதலில் உன்னால் வரிக்கப்பட்டவள்தான். இவள் பிதா, சாதுவான மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்ட தால் இவளை உனக்குக் கொடுக்கவில்லை—என்று கூறிப் பிறகு பிருகுவின் ஆச்ரமத்தையும் புலோமையையும் ராக்ஷஸனுக்குக் காண்பித்தது.

ராக்ஷஸன் தன் புதிய நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு, பிருகுவின் ஆச்ரமத்திற்குப் போனான். பிருகு நீராடப் போயிருந்தார். பிருகு வின் தர்ம பத்தினியான புலோமை அதிதியாக வந்த ராக்ஷஸனுக்குக் காய் கிழங்கு முதலான வற்றை ஆகாரமாகக் கொடுத்தாள்.

ராக்ஷஸன் உடனே பன்றி வடிவமெடுத்து அவளைத் தூக்கிக் கொண்டுபோனான். அப்பொழுது கர்ப்பமாயிருந்த அவளும் பிரசவித்து விட்டாள். கற்புள்ள அந்த ஸ்திரீயைத் தொட்ட ராக்ஷஸன் நீறாய் விழுந்தான். ராக்ஷஸப்பன்றி இப்போது ஒருபிடி சாம்பலாய்ப் போய்விட்டது.

புலோமை குழந்தையை வைத்து அழுது கொண்டிருந்தாள். அவள் திக்குத் தெரியாத காட்டில் தன் புருஷன் ஆச்ரமத்தைத் தேடி யலைந்தாள்.

பிருகு நீராடிவிட்டு நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஆச்ரமத்திற்கு வந்தார்; பத்தினியைக் காணவில்லை; எண்ணாததெல்

லாம் எண்ணினார். கடைசியாகப் புலோமையைத் தேடிப் புறப்பட்டார்.

அடர்ந்த ஆரண்யத்தில் தனியாய்க் குழந்தையை மார்போடணைத்துக்கொண்டு நின்றபுலோமையைப் பிருகு கண்டு நடந்ததையெல்லாம் விவரமாகத் தெரிந்துகொண்டார். "பெண்ணே! அந்த ராக்ஷஸன் நமது ஆச்ரமத்தை அறியானே; நீ இருக்குமிடத்தை அவனுக்குக் காட்டினது யார்?" என்று அவர் கோபத்தோடு கேட்டார்.

புலோமை, "அந்த ராக்ஷஸனுக்கு என் இருப்பிடத்தை அக்கினி தெரிவித்ததாக அந்த ராக்ஷஸனே சொன்னான்" என்றாள். பிருகு அதிகக் கோபமுடையவராய் "நீ எல்லாவற்றையும் புசிப்பவனாகக் கடவாய்" என்று அக்கினியைச் சபித்தார்.

---

## 10 விளையாட்டே வினையானது

ககமர் என்னும் பெயருள்ள ஒரு பிராமணர் இருந்தார். ஸஹஸ்ரபாத் என்ற ஒரு ரிஷி அவருக்குச் சினேகிதராயிருந்தார். அந்த ரிஷி விளையாட்டிலும் விநோதமாய்ப் பொழுது போக்குவதிலும் விருப்பமுள்ளவர்.

பிராமணர் ஒருநாள் அக்னிஹோத்ரம் செய்துகொண்டிருந்தார். அவர் ஞாபகம் அதிலேயே நிலைபெற்றிருந்தது. அப்போது ஸஹஸ்ரபாத்

புல்லினால் ஒரு சர்ப்பத்தைச் செய்து விளையாட்டா கக் ககமர்மேல் போட்டார். பிராமணர் பயத்தினால் மூர்ச்சையடைந்தார். பிரக்ஞை வந்ததும், கோபத் தால் ரிஷியைத் தகிப்பவர்போல் பார்த்தார். "ஸத் கருமத்தில் ஈடுபட்டிருந்த என்னை நீ திகிலடையச் செய்தாய்; என் வாக்கு சத்தியவாக்கு. தவிர்க்கமுடி யாதது. பொய்ச் சர்ப்பத்தால் என்னை பயமுறுத் திய நீ நிஜமாகவே சர்ப்பமாகக் கடவாய்" என்று சாபங்கொடுத்தார்.

பிரம ஞானியான ககமரது மனோசக்தியை நன்கு அறிந்த ரிஷி நடுங்கிப்போனார். பரபரப்பு டன் அவரை அடிபணிந்து அவருக்கு எதிரில் நின்று 'சிநேகிதனென்று பரிகாசம் செய்தேன். விளையாட்டே இப்போது வினையாய் விளைந்தது! சிறியோர் செய்த சிறுபிழை. பெரியோராகிய தாம் பொறுத்தல் வேண்டும். இந்தக் கொடுஞ்சாபத்தை நிவர்த்தி செய்யவேண்டும்" என்று ஸஹஸ்ர பாத் வேண்டிக்கொண்டார்.

அதிகமாக மனத்தில் துயரமுற்ற ரிஷிபுத்திர ரைப் பிரமஞானி பார்த்து மிகப் பச்சாத்தாபம் உள்ளவரானார். அவர் தம்சிநேகிதர் நிலைமைக்குறித் துப் பெருமூச்செறிந்து "ஐயோ! நான் சொன் னது எவ்வகையிலும் பொய்யாகாதே. இருந் தாலும் பிரமதி என்னும் பெரியோருக்கு குரு வென்னும் சற்புத்திரர் ஒருவர் உண்டாவார். அவ

ரைப் பார்த்தவுடன் உனக்குச் சாப விமோசனம் உண்டாகும்" என்று சொன்னார்.

---

## 11 குருவும் நீர்ப்பாம்பும்

ஸகஸ்ரபாத் சாபத்தால் பாம்பானார். உண்மையில் ஸாதுவாயிருந்ததால் அவர் நஞ்சுள்ள நாகமாக மாறவில்லை.

குருவென்பவர் தமது அன்பிற்கு உரிய பத்தினியைப் பாம்புகடித்ததால், ஸர்ப்பங்களை அழிப்பதாக நியமஞ் செய்துகொண்டார். எந்த ஸர்ப்பங்களைப் பார்த்தாலும் அவர் தயையின்றி அடித்து வந்தார்.

ஒரு கால்வா யோரத்தில் ஸகஸ்ரபாத் தண்ணீர்ப் பாம்பாய்ப் படுத்திருப்பதை ஒருநாள் குரு பார்த்தார். தடியை ஓங்கி அதைக்கொல்ல யத்தனிக்கையில் நீர்ப்பாம்பு "தபோதனரே! சிறிதும் தீங்கு செய்யாத என்னைக் கொல்லவருவது நியாயமாகுமா?" என்று கேட்டது. ஸர்ப்பங்களையெல்லாம் கொல்ல வேண்டுமென்று ஸங்கற்பம் செய்ய நேர்ந்த ஸந்தர்ப்பத்தை குரு பாம்புக்கு எடுத்துச் சொன்னார்.

நீர்ப்பாம்பு "பிராமணரே! இந்த உலகத்தில் மனிதர்களைக் கடிக்கிற ஸர்ப்பங்கள் வேறு. யாதொரு கெடுதியும் செய்யாத நீர்ப்பாம்புகள் வேறு. 'நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்து

றையும், அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு' என் பதை நீர் அறியீரோ? நீர்ப்பாம்பின் ஸ்வபாவம் வேறு; ஆனால் அதற்குப் பிறரால் வரும் உபத்திர வம் மாத்திரம் ஒன்றுயிருக்கின்றது. உம்முடைய உயிருக்குச்சமானமான மனைவியைக் கடித்தது நாக மே, நீர்ப்பாம்பன்று. ஒரு விஷ ஸர்ப்பத்தின் குற்றத்திற்காக எந்தப் பாம்பையும் எப்போதும் கொல்லவேண்டுமென்று கொடிய சபதம் செய்து கொண்டீரே! இது என்ன நியாயம்? நீர் பிரா மணர், தர்மம் தெரிந்தவராகக் காணப்படுகிறீர். குற்றமற்ற என்னைக் கொல்வது அழகா? என் உயிர் எனக்கு இனியதல்லவா?" என்று நீண்ட ஒரு பிரசங்கம் செய்தது.

பயத்தினுல் ஒடுங்கியிருந்த பாம்பின் பேச் சைக்கேட்ட குரு பெருவியப்படைந்தார். "நீ யார்? மனிதர்களைக் காட்டிலும் புத்திசாலியாகக் காணப் படுகிறுயே. ஏன் இந்த நீச ஜன்மத்தை அடைந் தாய்?" என்று கேட்டார்.

ஸஹஸ்ரபாத் தம் வரலாற்றை ஆதியோ டந்தமாகச் சொன்னுர்; பிறகு நீர்ப்பாம்பின் வடி வத்தைவிட்டு பிரமதேஜஸ்ஸோடு கூடிய தம் முன் னுருவை யடைந்தார்; குருவைப்பார்த்து, "புருஷ சிரேஷ்டரே! ஜீவகாருண்யமே முதன்மையான தர்மம். எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்புள்ள வனே அந்தணன். பெருமையைக் கருதியாவது

சுயநலத்தைக் கருதியாவது நாம் எந்தப் பிராணி யையும் இம்சித்தல் கூடாது. சாந்தகுண பூஷண னே பிரம ஞானி. கொல்லாமையிற் சிறந்த விரதம் இல்லை" என்று ஸஹஸ்ரபாத் பரமதர்மமான அஹிம்சையைக் குறித்துப் பேசி அவருடைய குணத்தை மாற்றினார்.

---

## 12. ஜரத்காரு சரித்திரம்

ஜரத்காரு, கியாதி பெற்றவர்; எப்போதும் தவத்திலேயே ஊக்கமுள்ளவர்; பிரம சரிய விர தத்தைக் கை கொண்டவர்; தர்மம் தெரிந்தவர்; உறுதியான நியமமுள்ளவர்; மஹாநுபாவர். பெருந்தவங்கிடந்து மனவலிமைபெற்ற அப்பெரி யார் கிராமத்திற்கு ஒரு ராத்திரியாகத் தங்கிவந்தார்.

சூரியன் அஸ்தமித்தவிடத்தில் தங்கிக் கொண்டு பூமியெல்லாம் திரிந்து, புண்யக்ஷேத் திரங்களைத் தரிசித்துப் புண்யதீர்த்தங்களில் நீ ராடி விநோத-விநோதமான காட்சிகளை யெல்லாம் அவர் கண்டு களித்து வந்தார். மாசில்லாத மனத் தையுடைய அந்த மஹரிஷியின் திருமேனி, ஜ்வ லிக்கின்ற அக்கினிக்கொப்பான ஓர் அபூர்வ தேஜ ஸோடு விளங்கியது.

அவர் ஒரு சமயம் தமது பிதிர்க்களைத் தரிசித் தார். "அப்பா, நாங்கள் உன் முன்னோர்; நீ ஒரு

வனே எங்கள் சந்ததியாயிருக்கிறாய். நீயும் அருந் தவத்தையே பொழுது போக்காகக் கொண்டிருக்கிறாய். நீ வயதானவனாயிருந்தும் உனக்கு இன்னும் விவாகமாகவில்லையே! இல்லறமே நல்லறம்; உலகத்திற்கு அத்யாவசியமான தர்மம் என்னும் உண்மையை நீ ஏன் இன்னும் உணரவில்லை? நீ ஒரு பதிவிரதையைக் கைப்பற்றினாலொழிய, உன்னால் உலகநெறியில் மேலே போக முடியாது. நீ கிரகஸ்தனாய் வாழ்ந்து, உன்னிலும் சான்றோரான புத்திர ரத்தினங்களைப் பெற்று, நம்முடைய குடும்பத்தையும் கோத்திரத்தையும் நிலைநிறுத்தவேண்டும். அப்பொழுதுதான், நாங்கள் ஸ்வர்க்கத்தில் ஸ்தானம் பெற்று ஆறுதலும் ஆனந்தமும் அடைவோம்" என்று அவர்கள் ஜரத்காருவுக்குச் சொன்னார்கள்.

அப்பால், குடும்பத்தையும் தம் நற்குண நற்செய்கைகளையும், நிலைநிறுத்தற்குப் புத்திரப்பேறு அவசியம் என்பதை ஜரத்காரு அறிந்தார். பிதிர்க்களின்பொருட்டும், உலகநன்மையின் பொருட்டும், ஆத்மார்த்தமாகவும், அவர் கல்வியிலும் குணத்திலும் அழகிலும் சிறந்த ஒரு கன்னியை விவாகம் செய்துகொள்ளச் சிரத்தையுடன் முயன்றார்.

ஆனால் அவருக்கு விகடமான ஒரு யோசனை தோன்றியது. அதாவது—"என் பெயருள்ள கன்னியையே நான் கலியாணம் செய்துகொள்வேன்.

ளுக்கு வலிமையில் மேற்பட்ட இரண்டு பிள்ளை களையே வேண்டினுள்.

வினதையின் இரண்டு புத்திரரும் கத்ருவின் ஆயிரம் பிள்ளைகளைக் காட்டிலும் ஒளியிலும் உரு வத்திலும் பராக்கிரமத்திலும் சிறந்தவர்களா யிருப்பார்களென்றும், இருவரும் அவரவர் கர்ப் பத்தை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வரவேண்டு மென்றும், ரிஷி சொல்லி, தவம்புரிய வனத்திற்குச் சென்ருர்.

காலம் வந்து கை கூடியபோது, கத்ரு ஆயி ரம் முட்டைகளையும், வினதை இரண்டு முட்டை களையும் பெற்றனர். இம்முட்டைகளை வேலைக்காரி கள், அவற்றிற்கு வேண்டிய அளவான உஷ்ண முள்ள பாத்திரங்களில் வைத்தார்கள்.

ஆத்திரக்காரிக்குப் புத்திமட்டு அல்லவா? புத்திரர்களை உடனே பார்க்க வேண்டுமென்ற பேராசையால், வினதை ஒரு முட்டையை உடைத் தாள். அதில் உடம்பின் மேற்பாகம் பூர்ணம் அடைந்தும், மற்ற பாகம் தெரியாமலுமிருந்த ஒரு புத்திரனைக் கண்டாள். அவள் வெட்கிப்போய், நெஞ்சழிந்தாள்.

அந்தப் புத்திரன், தன்னை அங்கவீன ஞக்கிவிட்ட தாயாரிடத்துக் கோபங் கொண்டான்; "அம்மா! நீ அநியாயமாக என்னைக் கெடுத்து

விட்டாய். நீ நீண்டகாலமாக எவளிடம் பொறுமைகொண்டு இப்படிச் செய்தாயோ, அவளுக்கு அடிமையாவாய்!" என்று அந்தப் புத்திரன் சபித்தான். பிறகு பெற்ற தாயிடத்தில் அவனுக்கு இரக்கம் பிறந்தது.

"அம்மா! நீ அதிக ஆசைகொண்டு என்னை இப்படிச் செய்துவிட்டாய். இனி விசனப்பட வேண்டாம். இரண்டாவது பிள்ளையையும், முட்டையையுடைத்து, என்னைப்போல் அங்கம் குறைந்தவனாகச் செய்துவிடாதே. பொறுமையோடு ஜாக்கிரதையாயிருந்தால், என்தம்பி உன்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பான்" என்று சொல்லி, அந்தப் புத்திரன், ஆகாச வீதியிலே கிழக்குமுகமாய்ப் போனான்.

அவன் பெயர் அருணன். அவன் சூரியனுக்குச் சாரதியானான். உலகங்களுக்கெல்லாம் தீபமாய் விளங்கும் சூரியனுடைய ரதத்தை இவனே ஓட்டுகிறான் என்பர்.

பின் இன்னொருமுட்டையிலிருந்து கருடன் குறித்தகாலத்தில் ஜனித்தான். நீண்ட காலத்துக்குப்பின் பெற்ற அக்குழந்தையைக்கண்டு, தாய் தன்சாபம் நிவர்த்தியானதென்று மகிழ்ச்சியடைந்தாள்; கருடனது பராக்கிரமத்தைக் கண்டு, ஈன்ற பொழுதிலும் அதிகமாகச் சந்தோஷித்தாள்.

## 14 தேவர்கள் அமிர்தம் கடைந்த கதை

தவமும் நியமமும் உள்ளதேவர்கள் எல்லாரும், மிக உயர்ந்ததும், சாதாரண, மனிதர்கள் மனத்தாலும் செல்லமுடியாததும், நதிகளும் விருக்ஷங்களும் நிறைந்ததும், மிக அழகிய பக்ஷி ஜாலங்கள் சப்திப்பதுமாகிய மேரு பர்வதத்தையடைந்து, அதன் கொடுமுடியிலேறி அமிர்த மதனத்தைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது பகவானுன நாராயணன் "தேவர்களே! மந்தரபர்வதத்தைக் கொண்டு பெரிய திருப்பாற்கடலைக் கடையுங்கள்; அமிர்தமுண்டாகும்" என்றுசொன்னுர்.

மகா உன்னதமான அந்த மந்தரபர்வதத்தை எடுக்கமாட்டாமல் தேவக் கூட்டங்கள் திருமாலைப் பிரார்த்திக்க, அவர், பர்வதம் தூக்குகிற வேலையில் ஆதிசேஷனை நியமித்தார். மகாபலசாலியான ஆதிசேஷன் அந்தப் பெரியமலையைத் தூக்கிக் கொண்டு பாற்கடலை நோக்கிச் சென்முன்.

தேவர்களும் அசுரர்களும் வேண்டிக்கொண்டபடி சமுத்திரத்திலிருக்கும் பெரிய ஆமை, மந்திரமலைக்கு முதுகு கொடுத்தது. இவ்வாறு, மந்தரத்தை மத்தாகவும் வாசுகியைக் கயிருகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்திற்காகச் சமுத்திரத்தைக் கடையத் தொடங்கினர்.

கொஞ்சநேரத்தில் பிரளயகாலாக்கினிக்கு ஒப்பானதும் ஹாலாஹலம் என்று பெயர் பெற்றதுமான கொடிய விஷம் உண்டாயிற்று. தேவர்களும் அசுரர்களும் பெரிதும் பயமடைந்து தேவதேவனை சிவபெருமானைச் சரணடைந்தனர். ஈசுவரன் உலகங்களுக்கு ஹிதம் செய்யக்கருதி அந்த விஷத்தைப் பானம்செய்து, அதைத் தம் கழுத்துக்குள் நிறுத்தினார். அதனால் அவர் கழுத்தில் கருநிறமுண்டாயிற்று. பின் நீலகண்டன் என்ற பேரும் அவருக்குண்டாயிற்று.

தேவர்கள் சந்தோஷமடைந்து திரும்பவும் சமுத்திரத்தைக் கடைந்தார்கள். வாசுகியின் முகத்திலிருந்து புகையுடனும் ஜ்வாலையுடனும் பெருமூச்சுகள் கிளம்பின. ஸமுத்திரத்தில் மேக கர்ச்சனைபோன்ற ஒரு பெரிய கோஷம் உண்டாயிற்று. ஜலஜந்துக்கள் மலையினால் நசுக்கப்பட்டு நூற்றுக் கணக்காக நாசமடைந்தன.

தேவர்களுக்குச்சோர்வுண்டாயிற்று. அவர்கள் நாராயணனைத் தியானித்தார்கள். அவன் அருளால் அவர்கள் சோர்வு நீங்கிப் பழையபடி கடைந்தார்கள். மந்திரம் சுழன்று கடலைக் கலக்கியது. அப்போது கரிய உருவத்துடன் மூதேவி உண்டானாள்.

அவர்கள் இன்னும் கடைந்தார்கள். பிறகு மிகக்குளிர்ந்த அமிர்தமயமான கிரணங்களையுடைய

சந்திரன் தோன்றி ஒளி செய்தான். பிறகு வெள்ளை வஸ்திரம் தரித்த லக்ஷிமி அவதரித்தாள். அப்பால் ரத்தினம், குதிரை, பாரிஜாதம், காமதேனு, வெள்ளை யானை, கற்பகவிருக்ஷம் இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்தன. முடிவில், தன்வந்தரி என்னும் தேவதை அமிர்த குடத்தோடு வெளிப்பட்டார். இந்த அற்புதத்தைத் தேவர்களும் அசுரர்களும் கண்டார்கள்; "அமிர்தம் எங்களுக்கு ! எங்களுக்கு!" என்று தோளோடு தோளிடித்துக்கொண்டு பேரிரைச்சலிட்டார்கள்.

பகவான் நாராயணன் எல்லோரையும் மயக்கும் தம் மாயாசக்தியால் ஆச்சரியமான பெண் உருவம் எடுத்து அசுரர்களின்முன் நின்றார். அம் மோகினி, அமிர்தகுடத்தை யெடுத்துக்கொண்டு தேவர்களையும் அசுரர்களையும் வரிசையாக உட்காரவைத்தாள். அசுரர்கள் அந்தத் தெய்வப் பெண்ணிடம் மனஞ்செலுத்தி மதிமயங்கி இருந்தார்கள். அப்போது அப்பெண் தேவர்களுக்கு அமிர்தபானம் செய்வித்தாள்; துஷ்டர்களான அசுரர்களுக்கு ஒரு துளியும் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டாள்.

அசுரர்கள் கூக்குரலிட்டார்கள்; ஆயுதபாணிகளாய்த் தேவர்களை எதிர்த்தார்கள். விஷ்ணு அமிர்த குடத்தை அசுரர் கவர்ந்து கொள்ளாமல் தடுத்தார். பெருங் கலகம் விளைந்தது.

விஷ்ணு தேவர்களுக்கு அமிர்தபானம் செய்விக்கையில் நரன் என்பவர் அசுரர்களைத் துரத்திக்கொண்டிருந்தார். அமிர்தம் குடித்த தேவர்கள் எல்லாரும் அசுரர்களுடன் யுத்தம் செய்தனர்.

தேவர்கள் அமிர்தத்தை ஆசையுடன் பானஞ் செய்யுங்காலத்தில், ராகு என்னும் அசுரனுக்கு நாவில் நீர் ஊறியது. "இந்த யுத்தத்தில் எனக்கு என்ன வேலை? யார் ஜெயிப்பாரோ தெரியவில்லை. எனக்கு வேண்டியது அமிர்தமே" என்று நினைத்து அவன் ஒரு தந்திரம் செய்தான்.

ராகு தேவ வேஷத்துடன் தேவர்கூட்டத்தில் சேர்ந்துகொண்டான். அவன் ஆவலாய் அமிர்தத்தைப் பானஞ்செய்ய ஆரம்பித்தான். அது அவன் இரைப்பையில் சேரும்போது தேவர்களின் நண்பரான சந்திர சூரியர்கள் அவனுடைய மோசத்தை வெளிப்படுத்தினார்கள். உடனே விஷ்ணு அவன் தலையைத் தம் சக்கரத்தால் அறுத்தெறிந்தார். தலையில்லா உடல் துடித்துக் கொண்டு பூமியில் விழுந்தது. ராகுவின் முகமோ சந்திர சூரியருடன் தீராப்பகை கொண்டது. அதனால் அது இன்னமும் அவர்களை விழுங்குகின்றது. சந்திர சூரிய கிரகணங்களுக்கு இது தான் காரணம் என்று ஜனங்கள் நம்புகிறார்கள்.

பிறகு சமுத்திரத்திற்கு அருகில் பயங்கரமான தேவாசுர யுத்தம் நடந்தது.

அதில் அசுரர்கள் தோல்வியடைந்து ஓடிப் போயினர். ஜயசாலிகளான தேவர்கள் ஜயகோஷம் செய்துகொண்டு ஸ்வர்க்கம் சென்றனர்.

## 15. ஒரு விநோதமான பந்தயம்

அமிர்தமதனம் செய்கையில் ஒரு வெள்ளைக் குதிரை உண்டாயிற்று. அதன் பெயர் உச்சைச்ரவம். "உச்சைச்ரவம் என்ன நிறம்?" என்பதைக் குறித்து வினதைக்கும் கத்ருவுக்கும் விவாதம் ஏற்பட்டது. "அதன் நிறத்தை உடனே சொல். இவ்விஷயத்தில் பந்தயம் போடுவோம்" என்று கத்ரு குறும்புத்தனமாய் வினதையைக் கேட்டாள். வினதை "சகோதரியே! வெள்ளைக் குதிரை வெண்மையானதுதான். நீ என்ன நினைக்கிறாய்? இது விஷயத்தில் பந்தயம் எதற்காக?" என்று மறுமொழி சொன்னாள்.

கத்ரு "அதன் வால் என்ன நிறம்?" என்று கேட்டாள். வினதை புன்னகை புரிந்து அதன் வாலும் வெண்மையானதுதானே; இதைப்பற்றி என்ன சந்தேகம்?" என்றாள். கத்ரு "ஏனம்மா சிரிக்கிறாய்? நான் அக்குதிரையின்வால் கறுப்பு என்று சொல்லுகிறேன். பெண்ணரசியே! நம்முள்

தோற்றவள் ஜயித்தவளுக்கு அடிமையாகவேண்டும். பந்தயம் போடுவோமா?" என்று கேட்டாள்.

இப்படி இவர்கள் இருவரும் பந்தயம்போட்டுக்கொண்டு "நாளையதினம் குதிரையைப் பார்ப்போம்" என்று தம் தம் வீட்டிற்குப் போயினர்.

பிறகு கத்ரு தன் சகோதரியை வஞ்சிக்க நினைத்தாள்; தன் ஆயிரம்பிள்ளைகளையும் அழைத்து, "நீங்கள் உங்கள் தாய் அடிமையாய் விடாதபடி செய்யவேண்டும்; மைபோன்ற நிறமுள்ள வால் மயிர்களாகி அக்குதிரையை அடையுங்கள்" என்று கத்ரு ஆக்ஞாபித்தாள்.

நாககுமாரர்கள் தாய் சொன்னதற்கு இணங்கவில்லை; 'தீவினை முற்பகல் செய்தால் பிற்பகல் விளையுமே' என்றார்கள். கத்ருவுக்குக் கோபம் பொங்கிவிட்டது. "தாய் சொற் கேளாத உங்களைச் சுடவேண்டும். நீங்கள் வெந்து நாசமாய்ப் போகவேண்டும்" என்று அவள் சீறினாள்.

ஆனால், தாயாருக்கு ஸர்ப்பங்கள் நன்மையையே எடுத்துக்காட்டின. அவள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. நாகசிரேஷ்டனான கார்க்கோடகன் மிகுந்த அன்புடன் மாதாவைவணங்கி "நான் மை நிறமான வால் மயிராகி உச்சைச்ரவத்தை அடைவேன். நீ கவலையற்றிரு" என்று சொன்னான். கத்ரு கவலை நீங்கிக் களிப்படைந்தாள்.

பொழுது புலர்ந்தது. சூரியனும் உதித்தான். பந்தயம் செய்துகொண்ட சகோதரிகள் இருவரும் குதிரையைப் பார்க்கப்போனார்கள்; காடு மலைகளை யெல்லாம் தாண்டிச் சமுத்திரக் கரைசேர்ந்தனர். பெரிய பெரிய அலைகள் வீசிப் பேரிரைச்சலிடும் சமுத்திரம் பயங்கரமாய் இருப்பதையும் பார்த்தார்கள்.

நாகங்கள் "நமது தாயின் விருப்பம் நிறைவேறுமற்போனால் கோபாக்கினியால் அவள் நம்மைத் தகித்துவிடுவள். தயை வந்தால் சாபத்திலிருந்து விடுவிப்பள். அவள் சொன்னபடி உச்சைச்ரவத்தின் வாலைக் கறுப்பாகச் செய்யவேண்டும்" என்று நிச்சயித்து அவ்வாறே செய்தன.

ஸபத்தினிகள் இருவரும் சமுத்திரத்தைத் தாண்டி ஆகாசமார்க்கமாகச் சென்று குதிரையை அணுகினர். உச்சைச்ரவம் சந்திரகிரணம்போலத் தளதளவென்று வெண்மையாயிருந்தது. ஆனால் அதன் வாலும் வாலைச்சேர்ந்த ரோமங்களும் கறுப்பாய்க் காணப்பட்டன.

வினதை இவ்விபரீதமான தோற்றத்தைக் கண்டு பிரமித்துப் போனாள். துயரக்கடலுள் ஆழ்ந்து திசையறியாது திகைத்த அவளைக் கத்ரு அடிமையாக்கிக் கொண்டாள்.

குறித்தகாலம் வந்தபோது கருடன் முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவந்தார்; அவர் உற்சாக முள்ளவர்; பலமுள்ளவர்; நினைத்தரூபம் எடுக்கவல் லவர். அவர் கண்கள் சிவந்து மின்னிக்கொண்டி ருந்தன. அவர் குரல் பயங்கரமாயிருந்தது. அவர் பறக்கும்போது அக்கினிபோல் உக்கிரமாக ஆகா யத்திற் செல்வார்.

அப்படிப்பட்ட கருடன்பந்தயத்தில் தோற்று அடிமைத்தன்மை அடைந்து வருந்திக்கொண்டி ருந்த தாயாகிய வினதை யிருந்தஇடம் சென்றார்.

பின் ஒரு நாள் கருடன் தன்தாயை நோக்கி, "கத்ரு சொல்வதை நான் ஏன் செய்யவேண்டும்?' என்று கேட்டார். தன் மாற்றாள் மோசம்செய்து தன்னை அடிமையாக்கிக்கொண்ட கதையை விவர மாக வினதை கருடனுக்குச் சொன்னாள். பின், கருடன் "எப்படியானால் என்தாயாரை அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பாய்?" என்று கருடன் கத்ருவை வினவினான். அவள் "பக்ஷியே! உன் பராக்கிரமத்தைப் பார்ப்போம். அமிர்தம் கொண் டுவா. அதன்பின் அடிமைத்தனத்திலிருந்து விமோசனம் உண்டாகும்" என்று சொன்னாள்.

பிறகுகருடன் ஸ்வர்க்கலோகம் சென்று அமிர் தத்தைக் கவர்ந்துவர யத்தனித்தார். அமிர்தத்

தைப் பாதுகாத்து வந்த தேவர்களை அவர் வென்று அமிர்தத்துடன் திரும்பினர்.

கருடன் தாயிடம் சென்று அவள் அடிகளில் அமிர்தகுடத்தை வைத்தார். அவள் மிகமகிழ்ச்சி யடைந்து கத்ருவுக்கு விஷயத்தைத் தெரியப்படுத் தினள். ஸர்ப்பங்கள் ஸ்நானஞ் செய்து "நான் முன்னே நான் முன்னே" என்று வருவதற்குள் இந்திரன் கருடன் அநுமதியின்மேல் அந்த அமிர்தத்தை எடுத்துக்கொண்டு திரும்பவும்ஸ்வர்க் கம் சென்றான்.

தாங்கள் செய்த மோசத்துக்காகப் பிரதிமோ சம் ஏற்பட்டதென்று ஸர்ப்பங்கள் தெரிந்து கொண்டன. ஆயினும் அமிர்தத்திலுள்ள ஆசை யால் குடம் வைக்கப்பட்டிருந்த தர்ப்பைப் பரப்பி னிடம்வந்து, "இது அமிர்தமிருந்த இடம்" என்று ஆவலோடு தர்ப்பங்களை நக்கின. அவ் வாறு நக்கினதால் ஸர்ப்பங்களின் நாக்குகள் இரண் டாகப் பிளக்கப்பட்டன. அவைகள் ஏமாந்து போயின. பின் கருடனின் பலத்திற்கு அஞ்சிக் கத்ரு வினதைக்குச் சுதந்தரம் கொடுத்துவிட்டாள்.

## 17. ஆதிசேஷன் வரலாறு

நாகங்களுக்குள் பெருங் கீர்த்திபெற்றவர் சேஷபகவான். இவர் ஆதிசேஷன் என்றும்

அழைக்கப்படுவர். இவர் தம் தாயான கத்ருவிடம் விடை பெற்றுக்கொண்டு, காற்றைப்புசித்து உறுதி யான நியமத்தோடு உக்கிரமான தவஞ்செய்தார். மலைகளிலும், காடுகளிலும், குகைகளிலும், புண்ய க்ஷேத்திரங்களிலும் தனிமையாயிருந்து நிய மத்தை விடாமல் புலன்களை யடக்கினார்.

இவருக்கு இவர் உடலின் மாம்ஸம், தோல் நரம்பு எல்லாம் உலர்ந்து போய்விட்டன. ஆனால் தவவலிமை அதிகரித்து வந்தது.

அப்பொழுது அவர்முன் பிரம்மா பிரத்தி யக்ஷமானார். அவர் ஆதிசேஷன் உள்ளத்திலிருக் கிற விருப்பத்தை அறிய முயன்றார்.

**சேஷன்:**—என் சகோதரர்கள் எல்லாரும் புத்தியீனர்கள். மூடர்களும் துஷ்டர்களுமான அவர்களுடன் வசிப்பதற்கு நான் விரும்பவில்லை. அவர்கள் பொறாமையுள்ளவர்கள்; ஒருவரை யொருவர் சத்துருவாகக் கருதிச் சச்சரவு செய்கி றார்கள். மேலும் அவர்கள் வினதையிடத்தும் அவள் பிள்ளைகளிடத்தும் பொறாமைப்படுகிறார் கள்; முக்கியமாகக் கருடனை எப்போதும் தூஷிக் கின்றனர். தீயாரைக் கனவிலும் காணாமலிருக்க வேண்டுமென்றே நான் தவம் செய்கிறேன்.

**பிர்மா:**—சேஷனே! நீ விரும்பும் வரத்தை என்னிடம் கேள். உன் புத்தி தர்மத்தில் செல்லு

கிறது. மேன்மேலும் அது தர்மத்திலேயே மிகவும் உறுதியாக இருக்கக்கடவது.

சேஷன்:—பிதாமஹரே! இந்த வரந்தான் நான் வேண்டினது. என் மனம் தர்மத்திலும், ஞானத்திலும், சாந்தியிலும், உண்மையிலும், தவத்திலும்,சீலத்திலுமே உற்சாகப்படக்கடவது.

பிர்ம்மதேவர் இதுகேட்டுத் திருப்தி யடைந்தார்; அவனுடைய தர்ம சிந்தையை வியந்தார்; "சேஷனே! உன்னுடைய ஞானமும், சீலமும், பொறுமையும் லோகோபகாரமான ஒரு கைங்கரியத்தில் பிரயோசனப்பட வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தார். சேஷனும் 'மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்' என்றார்.

பிறகு பிரம்மா, "சேஷனே! இந்தப் பூமியைப் பார். இதில் காடுகளும், மலைகளும், நாடுகளும், நகரங்களும், கடல்களும், சோலைகளும், நிரம்பியிருக்கின்றன. இந்தப் பூமி, எவ்வளவு பொறுமையாய் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டிருக்கிறது பார்! இதை அசையாமலிருக்கும்படி செவ்வையாக நீ தாங்கிக்கொண்டிரு" என்றார்.

நாகராஜனான அதிசேஷனும் பிரம்மதேவர் ஆணைப்படி பூமியைச் சிரசால் வகித்து வருகிறார். அந்தரத்தே யாதொரு ஆதாரமுமில்லாமல் இயங்கும் பூகோளத்தைத் தாங்கும் அபாரசக்தி யாது?

இந்த சக்தியையே மகாசக்திமானுகிய ஆதிசேஷ னென்று பெரியோர் கூறுகின்றனர்போலும்.

---

## 18 நாகர்களின் மந்திராலோசனை

கத்ரு, கோபத்தாலும் விதிவசத்தாலும் தன் அருமை மக்களான நாகங்களை வெந்து நீருய்ப் போக வேண்டுமென்று சபித்துவிட்டாள். புத்தி மானுன வாசுகி, அச்சாபத்திலிருந்து தப்புவதற் குரிய உபாயத்தைச் சகோதரர்கள் எல்லாருடனும் மிருந்து ஆலோசனை செய்தான். அப்போது அவன், "புத்திமான் பலவான். விதியையும் மதி யால் ஜயிக்கலாம். நமக்குப் புத்தி இல்லையா? பல மில்லையா? நாம் சாபவிமோசனத்திற்கு உபா யத்தை ஆலோசிப்போம். ஆலோசித்து நமது ஸர்ப்பஜாதிக்கு ஏற்பட்டிருக்கும் சாபத்தை விடு விக்க முயல்வோம்" என்ருன்.

ஸ்வஜாதி அபிமானத்தால் தூண்டப்பட்டு இவ்வாறு பேசிய வாசுகியை நோக்கி, அவன் சகோதரர்கள் 'எல்லாச்சாபங்களுக்கும் நிவர்த்தி யுண்டு. தாயார் சாபத்திற்கு விடுதலை எங்கும் இல் லையே!' என்ருர்கள்.

வாசுகி—"சகோதரர்களே! ஸர்ப்பங்களுக் கெல்லாம் க்ஷேமம் எப்படியுண்டாகும் என்பதைக் குறித்து ஆலோசனை செய்யவேண்டும். கெட்ட

காலத்தால், தாய், குழந்தைகளுக்கே, இரக்கமின்றி மிகக் கடுமையான சாபங்கொடுத்தாள். கெட்டகாலம் நம்மை அண்டாதபடி நாம் முயற்சி செய்யவேண்டும். ஸர்ப்பங்களின் நாசத்திற்குக் காரணமாக, ஜனமே ஜயராஜன் செய்யும் ஸர்ப்ப யாகம் நடவாதபடி தடுக்கவேண்டும்" என்றனன்.

நாகம் 1. நாம்பிராமணர்களாக ரூபமெடுத்து, ஜனமேஜயனிடம் யாகம் நடத்தாமலிருக்க வேண்டுமென்று பிக்ஷை கேட்போம்.

நாகம் 2. நாம் ஜனமேஜயனுக்கு நம்பிக்கையுள்ள மந்திரிகளாவோம். எல்லாக் காரியங்களிலும் அவன் நம்மை ஆலோசனை கேட்பான். அப்போது யாகம் நடத்தாதிருக்கும்படி நாம் புத்தி சொல்லுவோம்.

நாகம் 3. அதுதான் சரியான யுக்தியென்று எனக்கும் தோன்றுகிறது. நமக்குள் எல்லாரும் சிறந்த அறிவுள்ளவர்கள்; பேசத்தெரிந்தவர்கள்; விரும்பும் ரூபமெடுக்கக் கூடியவர்கள். மந்திரிகளாயிருக்கத் தகுதியானவர்கள். புத்திமானான ராஜா, புத்திமான்களான மந்திரிகளிடம் யாகத்தைக் குறித்து நிச்சயமாக ஆலோசிப்பான். அது செய்வது தகுதியல்ல என்று யுக்தியாலும் சாஸ்திரங்களாலும், ஆதாரங்காட்டி நம்மைக் காப்பாற்றிக் கொள்வோம்.

நாகம் 4. ஏன் இவ்வளவு கஷ்டம்? ஸர்ப்ப யாகத்திற்கு ஏற்படும் புரோகிதனை ஒரு ஸர்ப்பம் கடிக்கட்டும், அவன் இறந்து போவான்.

நாகம் 5. ஆம் ஆம் அதுவே சரியான ஆலோசனை. புரோகிதன் இறந்துபோனால் யாகம் எப்படி நடக்கும்?

நாகம் 6. இன்னும் வேறு புரோகிதர் யார் வந்தபோதிலும், அவர்களெல்லாரையும் கடித்து விடுவோம்.

நாகம் 4. ஸர்ப்பயாகம் செய்யும் முறை தெரிந்தவர்களையெல்லாம், நமது விஷப் பற்களால் கடித்து யமலோகம் சேர்த்துவிடுவோம்.

நாகம் 1. தப்பான வழி, குறுக்குவழிபோலக் காணப்பட்டாலும் அது நீண்டவழியே யாகும். அவ்வழியே சென்று சித்தி பெறுவது கஷ்டம்.

நாகம் 2. தப்பான வழியில் காரிய சித்தியான போதிலும், தப்பிதம் தப்பிதந்தான். தப்பானவழி ஒருபோதும் நேர்வழியாகாது.

நாகம் 3. கோணல்வழியில் ஜயம்பெற்றாலும் அது தோல்வியே யாகும்.

நாகம் 7. தர்மம் தலைகாக்கும். தயையுள்ளவனுக்குப் பயமில்லை. கொலை நல்லதாகாது. கொல்லாமையே நன்மைதரும். கஷ்டகாலம் வந்தபோது தர்மசிந்தையே நம்மைப் பாதுகாக்கும். கஷ்டத்

தில் தர்மமே சிறந்த பரிகாரமாகும். அதர்மம் நமது சமூகத்தையே அழித்துவிடும்.

நாகம் 8. அரசன் தான் யாகஞ்செய்து பார்க்கட்டும். நாம் மின்னலுள்ள மேகங்களாகி ஆகாய மார்க்கமாய்ப் போய் யாகசாலையில் ஜ்வலிக்கின்ற நெருப்பை, சளசளவென மழை பொழிந்து, அணைத்துவிடுவோம்.

வாசுகி சிரித்து "மந்திராலோசனை சபையில் குழந்தைகள் பேசக்கூடாது" என்று சொன்னான்.

நாகம் 4. இராத்திரியில் எல்லோரும் அயர்ந்திருக்கையில் யாகபாத்திரங்களைத் திருடிவிடுவோம். இப்படிச் செய்தால் யாகம் தடைபடுமல்லவா ?

நாகம் 5. ஆம் ஆம்! இதுவே ஆலோசனை. யாகபாத்திரங்களில்லாமல் யாகம் எப்படி நடைபெறும்?

நாகம் 6. உயர்ந்தகுலத்துதித்த நாக குமாரர்களுக்குத் திருட்டு தர்மமன்று. நாம் யாகசாலையில் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஊர்ந்து சென்று, நமது சத்துருக்களான மனிதர்களைக் கடித்துவிடுவோம்; அல்லது பயப்படுத்தித் துரத்தி விடுவோம்.

நாகம் 9. அல்லது, யாகசாலையிலுள்ள ஆகார வகைகளையெல்லாம் விஷத்தால் கெடுத்து அசுத்தப்படுத்தி விடுவோம்.

**நாகம் 10.** நாமே ராஜாவுக்குப் புரோகிதர்களா யிருப்போம். சரியான தக்ஷிணை கொடுக்கவேண்டு மென்று கேட்போம். புரோகிதருக்குட்பட்ட அர சன், நமக்குக் கீழ்ப்படிவான்; நாம் கேட்கிறபடி செய்வான்.

**நாகம் 11.** கோபாவேசம் கொண்டு, ஜனமே ஜயனையே கடித்துவிடுவோம். அநர்த்தங்களின் வேரையே வெட்டிக் களைவோம்.

**நாகம் 8.** அரசனையே பிடித்து நம்மிடமாகிய பாதாளத்துக்குக்கொண்டுவருவோம்; இங்கே கட்டி வைத்து வாலால் அடிப்போம்; பல்லால் கடிப் போம்; ஒருவளையில் அடைத்து வைக்கும்படி ஆக் ஞை செய்வோம். அவன் யாகம் செய்கிறதைப் பார்ப்போம்-என்றது.

இதைக்கேட்டதும் நாகங்களெல்லாம் கொல் லென்று சிரித்தன. அக்ராஸனம் வகித்த வாசுகி 'உஸ்' என்று எச்சரித்து அவர்களை மௌனமா யிருக்கும்படி வேண்டினான்.—

" அன்பர்களே! நாக சகோதரர்களே! நீங் கள் எல்லாரும் எப்போதும் குழந்தைகளாகவே இருக்கிறீர்கள்! சிறுபிள்ளைத்தனமான ஆலோ சனை எனக்குப் பிடிக்கவில்லை. உங்கள் ஆலோ சனையில் உங்களுக்கு இதம் செய்யத்தக்கது என்ன இருக்கிறது? பிறர்க்கு இனியரே தமக்கு

இனியர். பிறரை வஞ்சிப்போர் தமக்குத் தாமே வஞ்சகராவார். தினை விதைத்தால் தினை விளையும்; வினை விதைத்தால் வினை விளையும் அல்லவா? சகோதரர்களே! முன்பின் யோசனையின்றி நாம் ஒரு காரியத்தையும் செய்வது கூடாது. எண்ணித் துணிந்தபின், நேரானவழியில், பின்னோக்காது, லக்ஷியத்தையே நோக்கிச் செல்லவேண்டும். ஒரு காரியம்துணிந்தபின், திரும்பத்திரும்பயோசித்து, ஆலோசனையிலே காரியத்தை நழுவ விட்டுவிடக் கூடாது. முன்பின் பார்த்து யோசனை செய்வதாலேயே மனிதர், மனிதரானார்கள்; மனிதரது பதத்திற்கும் மேலாகச் சொல்லுகிறார்கள். சகோதரர்களே! மஹாத்மாவான கசியபர் நம்முடைய பிதா; அவர் அடிகளில் விழுந்து, அன்போடு நம்முடைய குறைகளை விண்ணப்பம் செய்துகொள்வதுதான் எனக்கும் என்னைச்சேர்ந்த உங்களுக்கும் நன்மையென்று நான் நினைக்கிறேன்" என்றனன்.

அப்பொழுது ஏலாபத்ரன் என்னும் நாகம், வாசுகியைப் பணமுடியால் வணங்கி, சபையையும் வணங்கிக் கூறுகிறான்:—

"நாக ராஜாவே! நாக சிரேஷ்டர்களே! இது விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயத்தையும்

பணிவாய்த் தெரிவிக்கிறேன். கேளுங்கள்! உங்களெல்லாருக்கும் இதை ஏற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணமிருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள்; ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற எண்ணமிருந்தால் அப்படியே யிருக்கட்டும். நான் இந்த மஹாசபையிலே என் ஆலோசனையைத் தெளிவாகச்சொல்லக் கடமைப்பட்டவனுயிருக்கிறேன். நாகர்களே! மனித சுபாவத்தை நீங்கள் அறிவீர்கள். பாண்டவ வம்சத்து ஜனமேஜய ராஜாவை நான் அறிவேன். அவனை நீங்கள் மேற்சொன்ன எந்த உபாயங்களின் வகையாலும் யாகம் செய்யவொட்டாமல் தடுக்கமுடியாது. குரங்கைக் காட்டிலும் மனிதர் பிடிவாதமுள்ளவர்கள். அவர்கள் 'ஸர்ப்பங்கள் கொடியவை, கொடியவை' என்று வசைகூறக் கேட்டிருக்கிறேன். கொடியவளான கத்ருவைத் தவிர, வேறு எந்த ஸ்திரி அன்புள்ள பிள்ளைகளை இப்படிச் சபிப்பாள்? அவள் சபித்ததைக்கேட்ட மனிதர்கள் 'பாம்புகள் பார்க்கப் பயங்கரமானவை; உக்ரமான விஷமுள்ளவை; நீச சுபாவமும் பாவச் செய்கையும் உள்ளவை. அவை மிகுதியாக இருக்கின்றன. நாகங்களுக்கு நாசகாலம் வந்துவிட்டது' என்று தங்களுடைய நன்மையைக் கருதிச் சந்தோஷித்தார்கள். மனிதர் சுயநலங் கருதுகிறவர்களல்லவா?

அதுநிற்க. மனிதர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள்; பரோபகாரம் செய்யும் ரிஷிகள் இருக்கிறார்கள். ரிஷிகளில் ஒரு கூட்டத்தார் ஓரிடத்திலும் தங்காமல் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா? இவர்களில் ஜரத்காரு மஹரிஷி ஒருவர். அவர் குலத்தில், அவர் ஒருவரே இப்போதிருக்கிறார். அவர் சினேகமே, நம்மை அபாயத்திலிருந்துகாப்பாற்றக்கூடும். அவர் எல்லாப்பிராணிகளிடத்திலும் இரக்கம் பாராட்டுவார். அப்படிப்பட்ட பெரியோர் ஆணையை ஒரு ராஜாவும் மீறி நடக்கத் துணியமாட்டார். நாம், கொடிய சுபாவத்தைவிட்டுத் தர்மிஷ்டர்களாய், ஜரத்காருவின் சிநேகத்தைப் பெறவேண்டும்" என்றது.

இந்த ஆலோசனை சபையோரால் ஒரே மனதாய் அங்கீகரிக்கப்பட்டது. சந்தோஷ ஆரவாரத்தோடு நாகசபை கலைந்தது.

---

## 20. பரிக்ஷித்து ராஜனின் அடாத செய்கை.

குருவம்சத்தில் பரிக்ஷித்து என்னும் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் வேட்டையாடப் போனார். புலிகளையும், பன்றிகளையும், மான்களையும், எருமைகளையும் இன்னும் பற்

பல காட்டுமிருகங்களையும் அவர் அடித்துக்கொன்ருர். அவர் பாணத்தால் அடியுண்ட ஒரு மான், அடர்ந்த காட்டில் எங்கேயோ காணுமல் போய் விட்டது. திக்குத்தெரியாத காட்டில் அந்த மானைத் தேடி அவர் வில்லுங்கையுமாக இங்கும் அங்கும் போனுர். அவர் வெகுதூரம் போய்விட்டார்; மானைக் காணவில்லை. ராஜா, களைத்துத் தாகத்தினுல் வருந்தினுர்.

அப்போது பரிக்ஷித்து வனத்தில் ஓர் ஆச்ரமத்தைப்பார்த்தார். அங்கே காணப்பட்ட மாட்டுக் கொட்டிலில் ஒரு ரிஷி உட்கார்ந்திருந்தார்.

ராஜா, வில்லுங்கையுமாகவே ரிஷியிடம் விரைவாகச்சென்று. "ஓ ரிஷியே! நான் யார் தெரியுமா?" என்று கேட்டார். ரிஷி பேசவில்லை.

"நான் பஞ்சபாண்டவர்களுடைய பேரன். என்னைப் பரிக்ஷித்து மஹாராஜா என்று சொல்வார்கள் "

ரிஷி பேசவில்லை.

"என்னுல் அடிக்கப்பட்ட மானைக்கண்டீரோ?"—என்று கேட்டார். ரிஷிபேசவில்லை.

இப்பொழுது ராஜாவுக்குக் கோபத்தால் அறிவு மறைந்துபோயிற்று. அவன் தன் வில்லின் நுனியால் செத்த பாம்பு ஒன்றை எடுத்து

ரிஷியின் கழுத்தில் போட்டுவிட்டு நகரம் சென்முன்.

அந்த ரிஷியின் பெயர் சமீகர். சமீகரிஷிக்கு ஒரு புத்திரர் இருந்தார். அவர் கடுமையான தவமுள்ளவர்; நியமம் தவருதவர். இளமைப்பருவமுள்ளவர். அவர் பெயர் சிருங்கி. ராஜா வந்திருந்த சமயத்தில் சிருங்கி வெளியே போயிருந்தார்.

சிருங்கி ஆச்ரமத்துக்கு வரும்போது அவரை நோக்கி, அங்கே விளையாடிக்கொண்டிருந்த அவர் சிநேகிதன் ஒருவன், கலகலவென்று கைகொட்டிச்சிரித்து "ஓ சிருங்கியே! உனக்கு வெட்கமில்லையா? உன் பிதா சவத்தைத் தோளில் சுமக்கிருரே! உனக்கும் பெருமை ஏன்? நீயும் ஆண்பிள்ளையென்று தலைநிமிர்ந்துசபையில் பேசவருகிருயே! நான் மிகவும் விசனப்படுகிறேன்" என்று இவ்வாறு சிருங்கியைப் பரிகசித்தான்.

சிருங்கிக்கு ஒன்றும் விளங்கவில்லை. தமது நண்பன் பரபரப்போடு சொன்ன பரிகாசச் சொற்களால் கோபங்கொண்ட அவர் கண்கள் கொதிப்படைந்தன. அதுகண்ட சிநேகிதன் நடந்ததையெல்லாம் விவரித்தான்.

அப்பால் சிருங்கி "எந்த ராஜா விருத்தரான என் பிதாவின் தோளில் செத்த பாம்பைப் போட்

டானே, அந்த அயோக்கியன் இன்று முதல் ஏழு இராத்திரிக்குள்ளாகப் பாம்பு கடித்துச் சாகப் போகிறான்" என்று சபித்தார். தன் தந்தை தோளில் செத்தபாம்புடனிருக்கக் கண்ட சிருங்கி நெஞ்சம் கலங்கி, துக்கத்தால் கண்ணீர் விட்டுக் கொண்டு "அந்தப்பாவியை இன்றைக்கு ஏழாவது நாள் பாம்புகடிக்கப்போகிறது!" என்று கதறினார்.

கோபாக்கினியால் ஜ்வலித்துக்கொண்டிருந்த சிருங்கியைப்பார்த்து, அவர் பிதா, அக்கினி மலையில் அமிர்தமழை பொழிந்ததுபோலப் பேசினார். "குழந்தாய்! தவம் செய்யும் நமக்குக் கோபம் அழகு அன்று. கோபம் பாபம். கோபம் ஒருவனைச் சண்டாளனாக்கிவிடும். நிமிஷ கோபம் நீண்ட காலத்துத் தவத்தையும் அழித்துவிடும். நாம் பரிக்ஷித்து மஹாராஜாவினுடைய ராஜ்யத்தில் இருக்கிறோம். அவரால் நியாயமாக ரக்ஷிக்கப்படுகிறோம். அவருக்குத் தீங்கு செய்வது எனக்குப் பிரியமன்று. ராஜா ரக்ஷிக்காமற் போவாரானால் நமக்குப் பெருங்கஷ்டம் வரும்; சௌக்கியமாகத் தவம் செய்ய நமக்கு முடியாது. ராஜா இல்லாத தேசத்தில் எப்போதும் சங்கடங்களுண்டாகின்றன. ராஜாவின் தண்டத்தினால் அல்லவோ குழப்பமுள்ள நாட்டில் ஒழுங்கும் அமைதியும் ஏற்படுகின்றன. கலங்கினவன், தர்மம் செய்யமாட்டான்

வேலை செய்யமாட்டான். ஒழுங்கான ராஜாங்கத்தால் தர்மம் நிலைநிறுத்தப்படுகிறது, நமது ராஜா பசியோடு மானைத்தேடிக் களைத்து இங்கு வந்து என் விரதத்தையறியாமல் இப்பிழையைச் செய்தார் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ஒரு பிழை, மற்றொருபிழையைப் போக்குமா? இரண்டுபிழைகளும் ஒரு நன்மையாகுமா? நீ ஏன் ஆலோசியாமல் சிறு பிள்ளைத் தனமாய் இப்படிச் செய்தாய்? இனி அவ்வரசனைக்காப்பாற்றுவதெப்படி?" என்று வருந்தினார்.

சிருங்கி, கோபத்துடனிருக்கிற தந்தையைப் பணிவுடன் பார்த்து, "நான் கோபத்தினால் சாபந்தந்துவிட்டேன். அந்தச் சாபத்தை மீட்கும்படியான தவமகிமை என்னிடமில்லையே! நான் என்னசெய்வேன்!" என்று கூறிவருந்தினர்.

அப்பால், முனிவர், தம்மிடமிருந்த வேறு சில முனிவர்களைப்பார்த்து, "அரசனிடம் போய், இச்செய்தியைச்சொல்லி ஏழுநாள் வரையில் பாம்பு வராதிருக்கும் படியான ஓரிடத்திலிருந்து வரும்படி சொல்லுங்கள்" என்று கூறியனுப்பினார். அவர்கள் அரசனைக்கண்டு தெரிவித்தார்கள். அரசன் தான்செய்த பிழையை எண்ணி வருந்திப் பின் தன் அமைச்சர்களுடனிருந்து ஆலோசித்துக்

கடலில் ஒரு பெரிய ஸ்தம்பம் நாட்டி அதில் ஒரு மண்டபம் அமைத்து அதிலிருந்து வந்தான்.

இப்படியிருக்கையில், சிருங்கி மகரிஷியின் சாபப்படி தக்ஷகன் என்னும் பாம்பு அரசனைக் கடிக்கவந்தது. வரும்வழியில் ஒரு பிராமணனைக் கண்டது. கண்டதும் இதுவும் ஒரு பிராமண ரூபங்கொண்டு அவன் தன்னை நெருங்கியதும் "எங்கேபோகிறீர் பிராமணரே" என்றுகேட்டது. அவன் நான் மந்திரம் உணர்ந்தவன். அரசனைப் பாம்பு தீண்டவொட்டாமற் காக்கவும் அப்படிக் கடித்தாலும் அவனை மந்திரசக்தியால் காப்பாற்ற வும் எண்ணங்கொண்டு செல்கிறேன். இந்தவிதத் தில் அரசனுக்கு உபகாரஞ்செய்து பெரும்பொரு ளடைந்து என் வறுமையை நீக்கிக் கொள்ளலா மென்பது என்னெண்ணம்" என்றான்.

தக்ஷகன், 'இவன் அரசனிடம் போவானா னால், நாம் அவனைக்கடித்தும் பயனில்லாமற் போம். இவனை அரசனிடம் செல்லாதிருக்கும்படி செய்யவேண்டும்' என்று கருதி, அவனைப்பார்த்து "நீர் அங்கேபோய் ஏன்சங்கடப்படுகிறீர்! உமக்குப் பொருள்தானே வேண்டும்? நான் தருகின்றேன்" என்று கூறி அவனுக்கு விருப்பப்படி பொருளைத் தந்து அவனை அனுப்பிவிட்டது.

அப்பால் அது, தன் விஷத்தை ஒரு எலுமிச் சங்கனியாகக் கரத்திலேந்திக்கொண்டு அரசனிடம் போய் அவனிடம் அவ்வெலுமிச்சம் பழத்தைக் கொடுத்து ஆசீர்வாதஞ்செய்தது. அரசன் பிராமணனுகவந்த தக்ஷகனை அன்புடன்வரவேற்று அவ் வெலுமிச்சம்பழத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டான். தக்ஷகன் அப்பொழுது அவ்வெலுமிச்சம் பழத்திலிருந்து ஒரு பூநாகமாக வெளிப்பட்டு அரசனைக் கடித்துவிட்டு மறைந்தது. பின் அரசன் இறந்தான். அப்பால் அவனுடைய புத்திரன் ஜனமேஜயன் பட்டத்துக்கு வந்தான்.

---

## 21. ஜனமே ஜயனும் ஆஸ்திகரும்

பரிக்ஷித்து மஹாராஜா இறந்தபிறகு, அவருடைய புத்திரனுகிய ஜனமே ஜயன் அரசனுனன். புதியஅரசனுக்குத் தனது தகப்பனுரைக்கொன்ற தக்ஷகன் விஷயத்திலும், பொதுவாக நாகங்கள் விஷயத்திலும் தீராதகோபமும் பகையும் ஏற்பட்டன. பின்பு அவ்வாசன் "தக்ஷகன், சிருங்கி என்னும் ரிஷியை வியாஜமாகக்கொண்டு, தன்னுடைய இயற்கையான துஷ்டத்தனத்தையே மஹாராஜா மீது செலுத்தினன். அந்த மந்திரவாதி வந்திருப்பாரானுல் என் பிதா ஜீவித்திருப்பாரே? என்பிதா ஜீவித்திருந்தால் பாதகனுன தக்ஷகனுக்கு என்ன

குறைந்துபோம்? ராஜாவைப்பிழைப்பியாமலிருக்க வேண்டுமென்று பிராமணருக்குப் பொருள்கொடுத்ததும் துராத்துமாவான தக்ஷகன்செய்த அநியாயம் அல்லவா? பிதாவிஷயத்தில் பழிக்குப் பழி வாங்கிப் பகைதீர்த்தாலொழிய என் நெஞ்சில் ஆறுதல் ஏற்படாது;இறந்துபோன ராஜாவிற்கும் மறுமையில் சாந்தம் இல்லை. ஸர்ப்பயாகம்செய்து இழிவான பிராணிகளாகிய பாம்புகளை வம்சநாசம் செய்துவிடுவேன்" என்று எண்ணினான்; எனது பிதாவை வதஞ்செய்த துராத்துமாவைப் பந்து மித்திரர்களோடும் இம்சிப்பேன். விஷாக்கினியினால் என்பிதாவை மாளச்செய்தபாவியான நாகனை எரிகிறதீயில் போடுவேன். அதுவே அவனுக்கு உரியதண்டனை" என்று அரசன் பிரதிக்ஞையுஞ் செய்தான்.

பிறகு ஜனமே ஜயன், மந்திர வித்தையில் தேர்ந்த பலரையும் அழைத்து, தான்நினைத்த காரியம்நிறைவேறுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் செய்தான். அவர்கள் அரசனை உற்சாகப்படுத்தினார்கள். தக்ஷகன் எரிகிற தீயில்விழுந்து நீருய்ப் போனதாகவே அவன் நினைத்தான்.

சர்ப்பயாகத்திற்கு வேண்டிய ஸாமான்கள் சேகரிக்கப்பட்டன. சாஸ்திரப்பிரகாரம் யாகசாலை கட்டி முடிந்தபிறகு, அரசன் யாகஞ்செய்யத்

தீக்ஷை செய்துகொண்டான்; 'என் ஆணையின்றி யாரும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்று துவாரபாலகனை நோக்கிகட்டளையிட்டான். கிரியை ஆரம்பமாயிற்று. புரோகிதர்கள் கறுப்புவஸ்திரங் களைப் போர்த்துக்கொண்டு மந்திர பூர்வமாக ஹோமஞ் செய்தனர். யாகசாலையில் புகை எழுந்து எங்கும் பரவியது. அப்போது பாம்புகளெல்லாம் மந்திரசக்தியால் இழுக்கப்பட்டன. அவை ஒன் றன்பின் ஒன்ருக ஜ்வலிக்கிற தீயில் துடித்துக் கொண்டும் படம் எடுத்துச் சீறிக்கொண்டும் விழுந்து நீருயின. இன்னுஞ் சிலபாம்புகள் வால் களினுல் ஒன்றையொன்று கெட்டியாகச் சுற்றிக் கொண்டு நெருப்பில் வெந்து நீருயின. வெள்ளை நிறமுள்ள பாம்புகள், கறுப்பு நிறமுள்ள பாம்பு கள், சாம்பல் நிறமுள்ள பாம்புகள் இவையெல் லாம் கிழங்களும் குட்டிகளுமாக வந்து விழுந்து மாண்டன. இவ்வாறு அந்த யாகத்தில் லக்ஷக் கணக்கான பாம்புகள் அழிந்தன.

நாகங்கள் இப்படி ஒன்றன்பின் ஒன்ருகவும், கும்பல் கும்பலாகவும் ஜனமே ஜயனது யாகசாலை யில் இரையாவதைத் தக்ஷகன் பார்த்தான்; தான் குற்றவாளியானதால் பயந்து தேவேந்திரனிடம் அடைக்கலம் புகுந்தான். வாசுகி யென்பவன் நாகங்கள் சாவதைக்கண்டு பயந்து தன் சகோ

தரியை நோக்கி"ஜரத்காருவே! நாகங்களின் நாசத்தைப்பார்க்கையில் என் உள்ளமெல்லாம் பற்றி எரிகின்றது. என் நிலையும் அபாயமாகவேயிருக்கிறது. துஷ்டனான தக்ஷகன் ஒருவனுக்காக நாம் எல்லாரும் நாசமாய்ப் போகவேண்டியதுதான். தக்ஷகனைப்போல் கோழைத்தனமாக ஓடி ஒளித்துக் கொள்ளவும் என்னால் ஆகாது. ஐயோ! எனக்குத் திசை தெரியவில்லையே! என் கண்கள் சுழல்கின்றனவே! என் இதயம் இப்போது வெடித்துவிடும் போலிருக்கின்றதே! நான் என்னசெய்யப் போகிறேன் ?" என்று கதறினான்.

ஜரத்காரு:—சகோதரனே! பயப்படவேண்டாம். மதியினால் விதியையும் வென்றுவிடலாம். நம்மையும் நம் பந்துமித்திரர்களையும் ஈசன் திருவருளால் நான் காப்பாற்றுவேன். என்னை எதற்காக என் பெயருள்ளவருக்கே கல்யாணம் செய்து கொடுத்தீர்களோ, அதற்குக் காலம் இதோ தெய்வ சங்கற்பத்தால் நேர்ந்திருக்கிறதென்று நினைக்கிறேன். என் குழந்தை ஆஸ்தீகனால் நாம் க்ஷேமம் அடையலாம். ஆஸ்திகன் ஆண்டில் சிறுவனாயிருந்தாலும் அறிவில் பெரியவனாகவே கௌரவிக்கப்படுகிறான். அவன் வைதிக ஞானமும் லௌகிக ஞானமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவன். அவன் உன்னையும் உன் பரிஜனங்களையும்

விடுவிப்பான்" என்று கூறி, வாசுகியிடம் விடை பெற்றுத் தன் புத்திரனை அடைந்து, "ஒவ்வொருவனும் தன் பந்துக்களுக்கு நன்மையை விரும்ப வேண்டும். 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்பர். அறிவே அழியாச்செல்வம்; இச் செல்வத்தைப் பெற்றவர்களே உண்மையான சீமான்கள். இத்தகைய சீமானுன நீ ஆபத்திலிருக்கிற உன் பந்துமித்திரர்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னுள்.

அதற்கு ஆஸ்திகர் "அம்மா! நம் பந்து மித்திரர்களுக்கு நேர்ந்த ஆபத்து யாது? அதைத் தெளிவாக எனக்குச் சொல்" என்று கேட்டார்.

ஜரத்காரு, "கத்ருவும் விநதையும் உச்சைச்ரவம் என்னும் குதிரையைப்பற்றி விவாதம் செய்து கொண்டனர். அப்போது தனக்குக் கீழ்ப்படியாத தன் புத்திரர்களைக் கத்ரு சபித்தாள். பின் வாசுகி பிரமதேவரைச் சரணம் அடைந்தான். பிரமதேவர் 'ஜரத்காரு, ஜரத்காருவை மனைவியாக அடைந்தபின், அவர்கள் புத்திரன், ஸர்ப்பங்களைச் சாபத்தினின்றும் விடுவிக்கப்போகிருன்' என்ருர்.

"இதைக்கேட்டு வாசுகி மகாத்மாவான உன் தந்தைக்கு என்னைக் கன்னிகாதானஞ் செய்தான். பிரமதேவர் குறித்த நற்காலம் பிறந்து விட்டது.

அக்காலம் வீணாகாமலிருக்கும்படி செய்யவேண்டும். மகனே நீ என்ன செய்யப்போகிறாய்?" என்றாள்.

ஆஸ்திகர் "அப்படியே ஆகட்டும்" என்று தாயாருக்கு விடைகூறி, தவித்துக்கொண்டிருக்கும் ஸர்ப்பங்களுக்கு அபயம் அளித்தார்; வாசுகியைக் கண்டு, "மாமா உங்களை விடுவிப்பேன். இது சத்தியம்! மனக்கலக்கம் வேண்டாம். நமக்கு ஜயமுண்டு; பயமில்லை. நான் விளையாட்டிலும் பொய் சொன்னதில்லை. இப்போதே ஜனமேஜயனிடம் செல்வேன்; அரசர்பிரானாகிய அவனை மங்கள வாக்கியங்களினால் திருப்திசெய்வேன். நீங்கள் என்னிடத்தில் வைத்த நம்பிக்கை ஒருபொழுதும் பொய்யாகாது. எவ்விதம் நன்மையுண்டாகுமோ, அவ்விதமே முயல்வேன். இதுவே எனக்குச் சிறந்த தவமும் அறமும் புகழுமாகும்" என்று சொன்னார்.

அப்பால், அவர் ஜீவகாருண்யத்தையே துணையாகக்கொண்டு, ஜனமேஜயன் யாகத்திற்கு மிகவிரைவாகப் போனார். யாகசாலையில், தேஜசும், புகழும் வாய்ந்த பிரமரிஷிகளும் ராஜரிஷிகளும், சுந்தரவானச் சுடர்களெனத் திகழ்ந்தனர். ஆஸ்திகர் அச்சாலையை அடைந்ததும், "பரிக்ஷித்தின் புத்திரரே! நம் அன்பர்களுக்கு க்ஷேம

ழுண்டாகக்கடவது! நந்திதேவன் கயன், கச பிந்து என்ற அரசர்களுடைய வேள்விகள் எப் படி இருந்தனவோ, அப்படியே இந்த உமது வேள்வியும் இருக்கிறது! பரதகுல திலகரே! நிருகன், அஜமீடன், இராமன், தர்மராஜா இவர் களுடைய வேள்விகளைப் போலவே உமது வேள் வியும் பெயர்பெற்று விளங்கும். இந்த ரித்விக்குக் கள் விசேஷ அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள். இவர்களுக்குச் செய்யும் தானமே தானம்; அது என்றும் அழியாது; என்றும் மங்காது; மேல் மேலும் தழைத்து வெள்ளமிடும். இந்த ரித்விக்கு கள் தம்தம் தொழிலில் சமர்த்தர்கள் என்பது எனக் கும் உலகத்திற்கும் நன்ருகத் தெரியும். ஒளியையே தனமாகவுடைய அக்கினி பகவானும், நீர் கொடுக் கும் அவியுணவை ஆசையுடன் வாங்கிப் புசித்து ஜ்வலித்துக் கொண்டிருக்கிருர். இந்த உலகத்தில் சிறிய பிராணிக்கும் பெரிய பிராணியால் இடர் நேரிடாமல் ராஜ்ய பரிபாலனஞ் செய்யத்தக்க முடிவேந்தர் உம்மைப்போல் வேருருவருமில்லை யென்று நான் கேள்வியுற்றிருக்கிறேன். உம்மு டைய தைரிய சாகசங்களைப்பற்றி நான் மன மகிழ்ச்சி யடைகிறேன். நீர் கட்வாங்கனுக்கும், நாபாகனுக்கும், திலீபனுக்கும் யயாதிக்கும் மாந் தாதாவுக்கும் சமானமான சக்தியுள்ளவர்! பீஷ்

மரைப்போல், நீர் உறுதியான விரதமுள்ளவராக விளங்குகின்றீர்! உமது ஸந்நிதியில் ஸ்ரீமானுகிய எம்பெருமானது அம்சம் விசேஷமாகக் காணப் படுகின்றது. இத்தகைய மகிமையுள்ள உம்மைத் துஷ்டர்களும் எதிரிகளும் எவ்வாறு கண்ணெடுத்துப் பார்க்கத் துணிவார்கள்?" என்ருர்.

ஆஸ்திகர் இவ்வாறு சொல்லக்கேட்டதும் அரசனும், ரித்விக்குகளும், சபையோரும் யாவரும் அகமகிழ்ந்தனர்.

ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும்ஜாடைகளையுங்கண்ட ஜனமேஜய மஹாராஜன், "இவன் வாலிபனுயிருந்தும் வயது முதிர்ந்தவனைப்போற் பேசுகிருன்" என்று நினைத்து, "மஹா ஜனங்களே! சபையோர்களே! நான் இவருக்கு வரங் கொடுக்க விரும்புகிறேன். இதில் நீங்கள் என்னை அநுசரிப்பீர்களாக" என்று சொன்னுன்.

அப்போது, சபையிலிருந்தவர்கள், "மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கில், மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்' என்பர். ஆதலின், வித்துவான் இளையவனுயிருந்தபோதிலும், அவனை அரசர்கள் முறைப்படி வழிபடவேண்டும். எந்த இராஜ்யத்தில் வித்துவான்கள் சந்தோஷமடைகின்றனரோ, அந்த ராஜ்யம் சீர் திருந்தி முன்னேற்றமடைவது திண்ணம்; அந்த

ராஜ்யத்திலே ஜனங்களுடைய எல்லா அபீஷ்டங்களும் நிறைவேறுவது நிச்சயம். இப்போது இந்த வாலிப வித்துவானை ஆதரியும். நம்மிடத்துத் தக்ஷகன் சீக்கிரம் வருவான்" என்று சொன்னார்கள்.

அரசன் ஆஸ்திகரை நோக்கி "வேண்டியவைகளைக் கேளும்" என்று சொன்னான். அப்போது ஹோதாவானவர் உற்சாகம் குன்றியவராய் "தக்ஷகன் இன்னும் வரவில்லையே" என்றார்.

அதற்கு ஜனமேஜயன் "தக்ஷகன் தானே நமக்கு விரோதி; நமது முயற்சி சீக்கிரத்தில் வெற்றி பெறும்படி நீங்கள் எல்லாரும் உங்களுடைய பூர்ண சக்தியைக்கொண்டு முயலுங்கள்" என்று சொன்னான்.

ரித்விக்குகள் "ராஜாவே, தக்ஷகன் இந்திரனைச் சரணமடைந்து அவன் வீட்டிலிருப்பதாக அக்கினிபகவான் தெரிவிக்கின்றார்" என்றார்கள்.

கோபத்தால் அரசன் கண்கள் சிவந்தன. அவன் மீசை பட படவென்று துடித்தது. அவன் பற்களை நெற நெற வென்று கடித்து "இந்திரனோடு கூடத்தக்ஷகனை அக்கினியில் தள்ளுங்கள்" என்று கர்ஜனைபுரிந்தான்.

ஹோதாவும் மனவுறுதியுடன் மந்திரங்களை உச்சரித்தார்; "இந்திரனும் தக்ஷகனோடு கூடவரக்

கடவன்; சீக்கிரமாக - அதி சீக்கிரமாக - நாகராஜனுடன் கூடவே தேவராஜனும் நெருப்பில் விழக் கடவன்" என்று ஹோமஞ் செய்தான்.

அப்போது இந்திரன் நடுநடுங்கிப்போனுன். அவனது வன்மையுள்ள சிங்காதனம் அசைய ஆரம்பித்தது. அவன் தக்ஷகனுக்கும் தனக்கும் நாசம்வரப்போகிறதென்று நினைத்தான். ஆயினும் தன்னை நம்பி அடைக்கலம் புகுந்த நாகத்தைக் காப்பாற்ற வேண்டியது தன் கடமையாதலால் தக்ஷகனை இந்திரன் தன் உத்தரீயத்தில் மறைத்து வைத்துக்கொண்டான். அங்ஙனம் மறைந்திருந்தும் அச்சத்தால் தக்ஷனுக்கு மனச்சமாதானம் உண்டாகவில்லை.

அரசன் திரும்பவும் கோபத்துடன் மந்திர மறிந்தவர்களைப்பார்த்து "இந்திரனோடு கூடவே துஷ்ட நாகமாகிய தக்ஷகனை அக்கினியில் வீழ்த்துங்கள்! வீழ்த்துங்கள்!" என்று இரைந்தான். ஹோதா உக்கிரமான திடசித்தத்தோடு ஹோமஞ் செய்தார்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் யாகசாலைக்கு மேல் ஆகாயத்தில் தேவராஜனுகிய இந்திரன் துக்கத்தால் மூர்ச்சித்துப் போன தக்ஷகனோடு காணப்பட்டான். மந்திரத்தின் சக்தியினுல் சுவாதீனம் தப்பி, பயத்தினுல் பிரமைகொண்டு அவர்

களிருவரும் அக்கினிச்சுவாலையின் அருகே வந்து கொண்டிருந்தார்கள்.

அங்குள்ள ரித்விக்குகள் "அரசே! தக்ஷகன் இதோ விரைவாக வருகிறான். பயங்கரமாகக் கத்திக்கொண்டும், துடித்துக்கொண்டும் உஷ்ணமான பெருமூச்சு விட்டுக்கொண்டும் வருகிற தக்ஷகனை இதோ பாரும்!" என்றனர்.

அந்தச் சமயத்தில் ஆஸ்திகர் பூர்ணமான சமாதானத்தோடு திடமானகுரலில் அரசனை நோக்கி "பிரபுவே! நீர் எனக்கு வரங்கொடுக்கக் கடவீர்: சாஸ்திரப்படி நடக்கும் இவ்வேள்வியில் வேண்டுவார் வேண்டும் பொருள் கொடுப்பதாக நீர் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறீர் அல்லவா ?" என்றார்.

அதைக்கேட்டு அரசன் "வித்துவானாகிய உம்முடைய மனோரதம்யாது ? எது எப்படிப்பட்டதாயிருந்தாலும் கொடுப்பேன்" என்று வாக்களித்தான்.

தக்ஷகனும் இந்திரனும் அக்கினியில் விழப் போகிறார்கள். அக்கினிபகவான் ஜ்வலித்துக் கொண்டு ஆவலோடு தமது நாவை நீட்டுகிறார். இதுவே தருணமென்று நினைத்த ஆஸ்திகர் "வேந்தே! இந்த வரத்தை நீங்கள் எனக்குக் கொடுக்கவேண்டும். உங்களுடைய யாகம் உடனே

நிற்கவேண்டும். இதில் இந்திரனும் தக்ஷகனும் விழாமலிருக்கவேண்டும். நம் அன்பர்களுக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது" என்றார்கள்.

---

## 22. உபரிசரவஸுவின் சரித்திரம்

ஒரு காலத்தில் உபரிசரனென்னும் அரசனொருவன் இருந்தான். அவன் பரிசுத்தன்; தர்மத்தை விடாதவன்; அவன் ஓர் ஆச்ரமத்தில் வசித்துக் கொண்டு தவஞ்செய்யத் தொடங்கினான். அது கண்ட தேவர்கள் அரசனைநோக்கி "வேந்தே! ஒவ்வொருவரும் பூமியில் தத்தம் கடமையைக் குறைவறச் செய்யவேண்டும். ராஜ தர்மத்தை நிலை நிறுத்துவதே உமதுகடமை. தத்தம் கடமையைச் செய்வோரே, தவஞ்செய்வோர்" என்று சொன்னார்கள்.

தேவராஜனான இந்திரன் அரசனைப் பார்த்து "எப்போதும் ஊக்கத்தோடும், விடா முயற்சியோடும் உலகத்தில் தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும். இது மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடனாகும். இங்ஙனம் நல்வழிப்பட்டுக் கடமையைக் கைங்கரியமாகச்செய்வோர் இம்மையிலும் நல்லின்பம்பெற்று மறுமையிலும் அழிவில்லாத புண்ணியலோகங்களை யடைவர். பூமியிலும் அவர்கள் தேவர்களுக்கு அன்புள்ள தோழராவர்.

தர்மத்தின் தாயகமானதேசம், பூமியென்னும் பசுவுக்கு மடியைப்போன்றது. அத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தில் குடியாட்சியைஸ்தாபித்து நடத்துவதைக்காட்டிலும் சிறந்த தவம் ஒன்றுமில்லை. அரசனே! உன்னுடைய ராஜ்யத்தில் தனதானியங்களுக்குக் குறைவில்லை; அது சுகமான பூஸாரமுள்ளது; சுத்தமானது. உன்னுடைய குடிகளோ தர்மந்தவறுதவர்கள்; யோக்கியர்கள்; எளிதில் திருப்தியடைகிறவர்கள்; தேசாபிமானம் மிகுதியாகவுள்ளவர்கள்; வாயில்லாப் பிராணிகளையும், தோழர்களாகவும், சகோதரர்களாகவும் கருதுகிறுர்கள். அவர்களுக்கு நன்மை செய்வதிலேயே விருப்பமுள்ளவனுயிரு. எவ்விதத்தாலும் சமூக சேவைபுரிவோன் மனித உருவங்கொண்ட தேவனுக வழிப்படத்தகுந்தவன்" என்றுன்.

அதைக்கேட்டதும் அரசன் தவம்புரிவதை விட்டு இந்திரனுல் கொடுக்கப்பட்ட விமானத்தில் ஏறிக்கொண்டு தன் தலைநகரத்துக்குப்போனுன். அங்கே இந்திரனுக்கு ஒரு கோவில்கட்டினுன். மார்கழிமாதம் சுக்கில பக்ஷத்தில் அக்கோயிலில் முப்பத்திரண்டுசாண் அளவுள்ள ஒரு மூங்கிற் கோலை நாட்டி, அக்கோலைப் புஷ்பமாலைகளாலும், பொற்கிண்கிணிகளாலும் சந்தனத்தாலும் அலங்காரம் செய்தான். அக்காலத்தில் சங்கங்களும்,

பேரிகளும், மிருதங்கங்களும் முழங்கின. அரசன் பாத்திரம் அறிந்து பலவிதமான தானங்களைக் கொடுத்தான். நகரமாந்தரும் கிராம ஜனங்களும் உத்ஸவத்தைக்கண்டு களிக்கக் கூட்டங்கூட்டமாய் வந்தார்கள். சூதர்கள் புராணகதைகளை உபந்யஸித்தார்கள். மாகதர் ஸ்தோத்திரம் பாடினர். சிலர் நாடகம் ஆடினர்; சிலர் நர்த்தனம் செய்தார்கள். வேறு சிலர் ஜலம் நிரம்பிய தோல் துருத்திகளைக் கொண்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். எல்லாரும் சந்தோஷமாக அவ்வுத்ஸவத்தைக் கொண்டாடினர். அரசனும், தனது தேவியோடும், மந்திரிகளோடும், விசேஷ ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு, ஜனத்தலைவர்களைக்கண்டு உல்லாசமாய் உரையாடிக்கொண்டிருந்தான். இவ்வண்ணம் வெகு விமரிசையாக இந்திரவிழா முடிவெய்தியது.

உபரிசரவஸுவுக்கு ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள். தன் தோள்வலியாலும் ஒழுக்கவன்மையாலும், சக்கரவர்த்தியாய், விளங்கிய அந்த ராஜா தன் புத்திரர்களை ராஜ்யத்தின் பல மாகாணங்களுக்கும் தலைவர்களாக்கினான். பிற்காலத்தில் இவர்கள் தங்கள் பெயர்களினாலேயே நகரங்களையும், ராஜ்யங்களையும் ஏற்படுத்தினார்கள். அவர்களில் பிரசித்திபெற்றவனாகிய பிருஹத்ரதன் என்பவன் மகத

தேசத்துத்தலைவனுய் விளங்கினுன். தோல்வியை அறியாத யது வென்பான் வீரருள் வீரனுய்ப் பேரும் புகழும் பெற்ருன்.

சக்கரவர்த்தியான உபரிசரவஸுவோ, புத்திமான்களிற் சிறந்தவனுய், ராஜ்யபாரந்தாங்குவதிலும், அழகும் பரிசுத்தமுமான பெரியகாடுகளில் வேட்டையாடுவதிலும் தன் வாழ்நாளைக் கழித்து, கைகால் முதலிய அவயவங்களைத் தேசசேவைக்கும் இதயத்தை எம்பெருமான் இணையடிக்கும் உரிமையாக்கி ராஜரிஷியென்ற பட்டப்பெயர் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தான்.

---

## 23. வியாஸர் வரலாறு

ஒரு செம்படவனுக்கு சத்யவதியென்று பெயருள்ள ஒரு புத்திரி யிருந்தாள். அவள் அழகும் விநயமு முள்ளவள்; உயர்குலத்துதித்த உத்தமிகளுக்குரிய நற்குணங்களெல்லாம் நிரம்பினவள். இளநகையுலாவும் அவள் மதிமுகங்கண்டு, பெற்ரோர் தங்கள் குறைகளையும், கஷ்டங்களையும் மறந்திருப்பர்.

செம்படவன் பெண்ணுகிய ஸத்யவதியை, அவள் தோழர்களும் தோழிகளும், மச்சகந்தியென்ற பெயரால் அழைத்து வந்தார்கள். அப்

பெண்மணி "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற நல்லுரைக்கிணங்க, தன் பெற்றோர்களுக்கு மனமொழி மெய்களில் பணிவிடை செய்து வந்தாள்.

ஒரு நாள் மச்சகந்தி தன் தகப்பனுக்காக ஓடம் நடத்திக்கொண்டிருந்தாள். தீர்த்தயாத்திரை செய்துவந்த சிறந்த ஞானியான பராசரர் அவளைக்கண்டு "ஓடக்காரன் எங்கே? நீயார்?" என்று வினவினார்.

**மச்சகந்தி:**—ஐயரே! நான்செம்படவப்பெண். என்தகப்பனார் மீன்பிடிக்கச் சென்றிருக்கிறார். அவர் ஆணையால் இந்த ஓடத்தை நான் நடத்துகிறேன்.

**பராசரர்:**—நல்லது, பெண்மணியே! ஏன் தாமதிக்கிறாய்? ஓடத்தை நடத்து. நான் உனக்கு ஐந்நூறு பொன் கொடுப்பேன். சீக்கிரம் ஓட்டுவாய்.

மச்சகந்தி 'ஆகட்டும்' என்று சொல்லி ஓடத்தைநடத்தினாள். அப்போது முனிவர் "நான் உன்னை மணஞ்செய்துகொள்ள விரும்புகிறேன்" என்று தெரிவித்தார். ஸத்யவதி வெட்கத்தோடும் விருப்பத்தோடும் அவரை நோக்கி "பகவானே! நான் தந்தைக் குட்பட்டிருக்கிற கன்னிகை; தந்தையின்சொற்படி நடக்கும் நியமமுள்ளவள்."

இதைக்கேட்ட பராசரர், உலகம் "என்பது உயர்ந்தோரைக் குறிக்கும். உயர்ந்தோர் தொன்று தொட்டுச் செய்துவரும் ஆசாரமே சிஷ்டாசாரம் எனப்படும். வேதங்களையும், தர்ம சாஸ்திரங்களையும், தர்மஸூக்ஷ்மங்களையும் அறிந்தவர்களே உயர்ந்தோராவர். இவர்களுக்குக் கொல்லாமை, பொய்யாமை, திருடாமை, பிரமசரியம், வைராக்கியம் ஆகிய இவை நியமங்கள். தூய்மை, திருப்தி, ஞானம், பக்தி ஆகிய இவைவிரதங்கள். இவைகளே தர்மத்தின் காவல்கள். தர்மம் என்ற பதத்திற்குத் 'தரிப்பது' என்று பொருள். அதாவது தர்மம் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பதாம். இன்னும் இப்பதத்திற்கு 'விடாமற்கூட இருப்பது' என்றும் பொருள் கூறுகின்றனர். தர்மமே எல்லாவற்றையும் தரித்து என்றும் நம்மைவிடாமல் தொடரும். தோன்றாத் துணையாய் இனியபலனை நமக்கு அளிப்பதென்று உயர்ந்தோர் உபதேசித்திருக்கின்றனர். ஆதலால் இனிய பலனைப் பெறுவதற்குத் தர்மத்தையே பற்றவேண்டுமல்லவா? காந்தர்வ விவாகம் பிராமணர்தர்மமாகுமா? கோபமுடையவள், அங்கஹீனமுடையவள், காக்கைவலிப்பு, குஷ்டரோகம் முதலிய ரோகமுள்ளவர்கள், இவர்களை விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்று தர்மசாஸ்திரம் கூறு

கிறது. குற்றமற்ற கன்னிகை விஷயத்திலும், தந்தை, பாட்டன், உடன்பிறந்தான், தாய், அம்மான், உபாத்தியாயர், புரோகிதர் ஆகிய இவர்கள் கன்னிகாதானஞ் செய்வதற்கு அதிகாரமுள்ளவர்கள். இவர்களால் கொடுக்கப்பெற்றே கன்னிகையை அடையவேண்டும் என்று விவாக விஷயத்தைப் பற்றிப் பெரியோர் கூறுகின்றனர். இவ்வுத்தமியை எனக்கு யார் கன்னிகாதானஞ் செய்யப் போகிறார்கள்?" என்றிப்படி மாசற்ற மனமுள்ள பராசர பகவான் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் ஆகாய வீதியினின்றும் பரிஹிஷதர் என்னும் பிதிர்க்கள் இறங்கிவந்தனர்; அவர்களோடு வஸிஷ்ட மகரிஷியும் எழுந்தருளினார். இதற்குள் ஓடம் ஒரு தீவை அடுத்தது. இவர்கள் எல்லோரும் அத்தீவிற்குள் சென்றனர். வஸிஷ்டர், பராசரருக்கும் ஸத்தியவதிக்கும் நல்வரவு, கூறினார். அப்போது பிதிர்க்கள் பராசரரை நோக்கி, "இவள் எங்களுடைய மானஸபுத்திரி, சாபத்தினால் செம்படவப் பெண்ணானாள். நாங்கள் இவளை உமக்குக் கன்னிகாதானஞ்செய்யக் காத்திருக்கிறோம்." என்றனர்.

வஸிஷ்டர், "இப்பராசரன் என்வம்சத்திற்கு ஆதாரமாயிருப்பவன்; பிரமசாரி; உங்களுடைய

பெண்மணியைக் காதலிக்கிருன்" என்று மறு மொழி சொன்ஞர்.

இந்தச்சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் நைமிசாரண்யத்து ரிஷிகள் பராசருடைய விவாகத்தைக் காண விரும்பி அங்கே வந்தனர். வஸிஷ்டரது பத்தினியாகிய அருந்ததி, விவாகத்திற்குரிய சாமக்கிரிகளை முறைப்படி சேகரித்துக் கொண்டு வந்தாள்.

விச்வகர்மாவால் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த கொட்டகையில் சுக்கிலபக்ஷத்தில், விசாக, நக்ஷத்திரத்தில் திரயோதசிதிதியில் சுபமான கிரகங்களோடு சேர்ந்த முகூர்த்தத்தில், வஸிஷ்டர் 'விவாகத்திற்கு இதுவேகாலம்' என்று சொல்ல, அந்தச் சுபவேளையில், முறைப்படி நடக்கவேண்டிய சடங்குகளுடன் விவாகம் சிறப்பாக நடந்தது.

விவாகம் நடந்த அத்தீவிலேயே பராசரரும் ஸத்யவதியும் பலநாள் இன்பமாய் வாழ்ந்துவந்தனர். பின்ஸத்யவதி ஓர் ஆண்மகவை ஈன்ருள். த்வீபத்தில் இருந்ததனுல் த்வீபர் என்று பராசரர் பெயர்பெறுவர். த்வீபத்தில் பிறந்த அவர் புத்திரர் த்வைபாயனர் என்று அழைக்கப்படுவர்.

த்வைபாயனர், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து ஏழுவயது குமாரராஞர். பராசரர் தமது புத்திரரைப் பெருங்

கருணையோடு பார்த்து “ ஆசைக்குமாரனே ! முதலில் பேருதவி செய்தவர்களான தாய்தந்தையர்களை ஒருபோதும் தூஷிக்கலாகாது. கர்ப்பத்தில் தரித்ததனுலும், கஷ்டங்களைப்பொறுத்ததனுலும், பெற்ருேருள் தாயே மிகச் சிறந்தவள். உலக நடையையும் சாஸ்திர விதியையும் யுக்தியால் ஆராய்ந்து, பெரியோர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவரே புக்திமான்கள். நீ தர்மத்தை ஆராய்ந்து மானிடர்களுக்கு உபதேசம் செய்யவேண்டும். நீ அன்பு நெறி நின்று, தவத்தையே தனமெனக்கருதி, பிரஜைகளின் நன்மைக்காக உழைக்கவேண்டும்” என்று தந்தை சொல்ல ‘மூத்தோர் சொல் வார்த்தைஅமிர்தம்’ என்கிறபடி, அவர் உபதேசத்தை தேவாமிர்தமாகப் பாவித்தார் த்வைபாயனர்.

ஸத்யவதியம்மையும், கணவரான பராசரர் பாதங்களில் விழுந்தெழுந்து தன் புத்திரரைக் கையினுல் பிடித்துக்கொண்டாள். த்வைபாயனரும்அன்போடு‘அம்மா!’ என்றழைத்துத் தாயோடு உரையாடினுர். பெற்ற தாய்க்குத் தன் புத்திரனைத் தொடுவதைப் பார்க்கிலும் வேறு சிறந்த சுகம் எவ்வுலகிலுமில்லையன்ருே? அவள் த்வைபாயனரைத் தழுவி உச்சிமோந்து கண்ணீர் சொரிந்தாள். “புத்திரலாபத்திற்குமேலான லாபம் இவ்

வுலகத்தில் ஒன்றுமில்லை. மகனே! நீயே என் பெருந்தவம்; பெறுதற்கரிய பெருஞ்செல்வம். தேவர்களுக்கு அமிர்தங்கிடைத்ததுபோல் எனக்கு நீ கிடைத்திருக்கிறாய்! ஆதலால், நான் உன்னைப் பிரிந்து உயிர்தரியேன்" என்று சொன்னாள்.

பராசரர், பரிசுத்தமான தமது ஆச்ரமத்தில், தமது புத்திரருக்கு யாஜ்ஞவல்கிய முனிவரைக் கொண்டு உபநயனஞ் செய்வித்தார். பிறகு த்வைபாயனர் வேதவேதாந்தங்களை ஓதிக்கொண்டு தவத்திலேயே மனத்தைச் செலுத்தினார்; யமுனைத்தீவிலே பிறந்து வளர்ந்த த்வைபாயனர், வேதங்களை வகுத்து வேதவியாஸர் என்று பேரும் புகழும் பெற்றார். ஐந்தாம் வேதமான மகா பாரதத்தையும் அருளிச்செய்தார்.

---

## 'சஞ்சீவினி'

ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஒருவருக்கொருவர் விரோதமுண்டாயிற்று. சிறந்த புத்திசாலியாகிய பிருகஸ்பதி, தேவர்களுக்குப் புரோகிதர். பிருகுவின் புத்திரராகிய சுக்கிராசாரியர், அசுரர்களின் குரு.

தேவாசுர யுத்தங்களில் இறந்துபோன அசுரர்களையெல்லாம், தமக்குத் தெரிந்த 'சஞ்சீவினி' யென்னும் வித்தையின் பலத்தைக்கொண்டு, சுக்

கிரர் பிழைப்பித்தனர். அதனால் மாண்டுபோன அசுரர்கள் துயிலுணர்ந்தெழுந்தவர்களைப்போல் மறுபடியும் எழுந்து முன்னிலும் அதிகமான சக்தியோடும், உற்சாகத்தோடும் தேவர்களுடன் போர்புரிந்தனர்.

இவ்வித்தை பிருகஸ்பதிக்குத் தெரியாதாதலால் போர் முனையில் உயிர் துறந்த, தேவர்களை அவர் பிழைப்பிக்கவில்லை.

தேவர்கள் மிகுந்த துயரம் அடைந்தனர். அப்போது பிருகஸ்பதியின் குமாரனாகிய கசன், "தேவர்கள் நம்மை நம்பி அடுக்கிறார்கள். அவர்களைத் தாங்குவது நமது கடமை. சுக்கிரனிடத்திலிருக்கும் வித்தையைத் துரிதமாகச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். இதற்கு என்னசெய்யலாம்? சரி, சரி, எனக்கு இப்பொழுது ஒரு யோசனை தோன்றுகிறது. சுக்கிராசாரியரை நான் பணிவிடையால் சந்தோஷப்படுத்திக் காரியசித்திபெறுவேன்" என்று சிந்தித்து, அசுரராஜாவாகிய விருஷபர்வாவின் நகரத்திற்குச்சென்று சுக்கிரர் மாளிகையை அடைந்து, அவரைக்கண்டு வணங்கி, "அங்கிரஸ் முனிவரின் பேரனும் பிருகஸ்பதியின் புத்திரனுமாகிய அடியேன் பிரஸித்திபெற்ற ஆசாரியஸ்வாமிகளாகிய தங்களிடம் பூரணமான பிரமசரியத்தை அநுஷ்டிக்கப் போகி

றேன்; நாயினேனையும் ஒரு பொருளாக்கிச் சீட ஞக ஏற்றுக்கொள்ளக்கடவீர்?" என்று பிரார்த் தித்தான்.

இதேக்கேட்டுச் சுக்கிரரும் இளநகையரும்பி "கசனே! உன் வரவு நல்வரவாகுக! இன்றே சுப தினம்; இதுவே சுபமுகூர்த்தம். கௌரவிக்கத் தகுந்த உன்னை நான் கௌரவிப்பேன்; அதனுல் பிருகஸ்பதியும் கௌரவிக்கப்பட்டவராவர்" என்று மறுமொழி சொன்ஞர்.

கசனுக்கும் சுக்கிரர் புதல்வியும் கன்னிகையு மாகிய தேவயானிக்கும், சுத்தமான நட்பு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அவனுக்கு அவள் வார்த்தையே வேதம்; தினந்தோறும் அவன் அவ ளுக்கு அழகான புஷ்பங்களையும் இனிய பழங் களையும் கொண்டுவந்து கொடுப்பான். பாடுகிறவ னும், பணிவிடை செய்கிறவனும், இனிமையாகப் பேசுகிறவனும், அழகுள்ளவனும், அன்புள்ளவ னும், தன்னை அலங்கரித்துக்கொள்வதில் விருப்ப முள்ளவனுமாகிய புருஷனைப் பெண்கள் விரும்பு வது இயல்பு. தேவயானியும் முதலில் கசன் விஷ யத்தில் இரங்கிஞள். இரக்கமே நாளடைவில் அன்பாய் மலர்ந்து நட்பாய் முதிர்ந்தது. பின் தேவயானி, பிரமசாரியான பிராமணனேடு விளை யாடியும் பாடியும் விநோதமாகப் பொழுதுபோக்கி

ளுள். அவன் தன்னை உபசரிப்பதுபோலவே அவனையும் தான் உபசரிக்க முயன்றுள்.

இவ்வாறிருக்கையில் சில மாதங்களாயின. பின், அசுரர், கசனை இன்னுனென்று தெரிந்து கொண்டார்கள். தேவர்களிடமுள்ள பகையினுலும், தேவகுருவான பிருகஸ்பதியினிடமுள்ள வெறுப்பினுலும், தங்களுடைய குருவின் அரிய ரகசிய வித்தை எதிரியிடம் போகாமல் காப்பாற்றுவதற்காகவும், அவர்கள் கசனிடம் பொருமை கொண்டார்கள்; தன்னந்தனியாய்க் காட்டில் பசுமேய்த்துக்கொண்டிருந்த கசனைக்கொன்று துண்டு துண்டாகவெட்டி நாய் நரிகளுக்கு விருந்தாக்கினர்.

மேய்ப்பவனில்லாமல் பசுக்கள் கொட்டிலுக்குத் திரும்பி வந்தன. அப்போது சூரியாஸ்தமன சமயம். கசன் வரும் வழிமேல் விழிவைத்திருந்த தேவயானி திகிலடைந்தாள். எண்ணுததெல்லாம் எண்ணினுள்; அழுதுகொண்டு தந்தையிடம் சென்றுள்; "பசுக்கள் வந்துவிட்டன. ஆனுல் பிரமசாரியோ காணப்படவில்லை. ஏதோ மோசம் நடந்திருக்கவேண்டுமென்று நான் சந்தேகிக்கிறேன். அவனை விட்டு நான் ஜீவிக்கமாட்டேன். இது உண்மை" என்றுள்.

உடனே சுக்கிரர் சஞ்சீவினி வித்தையைப் பிரயோகித்துத் தமது மாணுக்கனை 'வா' என்று

அழைத்தார். கசன் உயிர்பெற்று எதிர் வந்து சுக்கிரரை வணங்கினுன்; தேவயானியைச் சந்தோஷமாய்க் கண்குளிர நோக்கினுன். கசனது நோக்கினுல் புதிய அழகும் நிறமும் பெற்று விளங்கிய தேவயானி, "நீ ஏன் தாமதம் செய்தாய்?" என்று கேட்டாள். அதற்குக் கசன் "பெண்ணரசே! நான் சமித்துக்களையும், தர்ப்பம் முதலியவற்றையும், விறகையும் எடுத்துக்கொண்டு மிகுந்த சுமையினுல் களைப்புற்று ஓர் ஆலமரத்தை யடைந்தேன். மாடுகளும் ஒன்று சேர்ந்து மர நிழலையடைந்தன. அப்போது அங்கே சில அசுரர்களைச் சந்தித்தேன். அவர்கள் 'நீயார்?" என்று என்னைக் கேட்டனர். 'நான் பிருகஸ்பதியின் புத்திரன்; கசன்...' என்று சொன்னமாத்திரத்திலே அசுரர் என்னைச் சித்திரவதை செய்து நாய், நரி, கழுகுகளுக்குப் போட்டு விட்டனர். அன்புள்ளவளே! உனதருளால் உயிர்பெற்று உன் சமீபம் வந்து சேர்ந்தேன்" என்று மறுமொழி சொன்னுன்.

மற்ருெரு நாள் தேவயானி, கசனை நோக்கி "பிராமணு! எனக்குப் புஷ்பம் கொண்டு வா" என்று கட்டளையிட்டாள். அசுரர் மறுபடியும் அவனைக் காட்டிற் சந்தித்தார்கள்; "இதோ வந்தானே கசன்" என்று இரைச்சலிட்டுக்கொண்டு அவனைப்பிடித்துக் கீழேதள்ளி அரைத்துச் சமுத்திரத்

தில் கரைத்துவிட்டார்கள். தேவயானி கசன்போய் வெகு நேரமானதைத் தந்தைக்குத் தெரிவித்தாள். மறுபடியும் சுக்கிராசாரி கசனை வரவழைத்தார்.

பிறகு அசுரர் கசனைக்கொன்று கொளுத்தி நீருக்கி, அப்பொடியை மதுவிற் சேர்த்து, சுக்கிரருக்கே கொடுத்துவிட்டார்கள். சுக்கிராச்சாரியர், "பெண்ணே, பிருகஸ்பதியின் புத்திரன் இறந்து போனன். முதலில் நாம் வித்தையினுல் பிழைப்பித்தோம்; மறுபடியும் கொல்லப்பட்டான். நாம் என்ன செய்வோம்? தேவயானி! தேவேந்திரன் முதலிய தேவர்களும் அசுரர்களும், பிராமணர்களும், உலகமனைத்தும் உன் சமீபத்தில் வரும்போதே வணங்குகின்றனர்! நீ ஏன் விசனப்பட வேண்டும்? அம்மா, அழாதே. உலகத்தில் பிறந்தவர்களுக்கெல்லாம் மரணம் நிச்சயமாகும். 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' மரணத்தைப்பற்றி துக்கப்படுவது சரியன்று. இவனைப் பிழைப்பிப்பதனுல் என்னபயன்? பிழைப்பிக்கப்பட்டபோதிலும் இவன் கொல்லப்படுகிறுன்" என்று சொன்னுர்.

அதற்குத் தேவயானி, "ரிஷி புத்திரனைப் பற்றி நான் எப்படித் துக்கியாமலிருப்பேன்? அவன் தவத்திற்கெல்லாம் நிதியாய் விளங்கும் பிருகஸ்பதியின் அருந்தவப் புதல்வன்; தவத்தையே தனமாகவுடைய பிரமசாரி; எப்போதும்

முயற்சியுள்ளவன்; வேலைகளில் நிபுணன்; அஞ்சா நெஞ்சுபடைத்த ஆண்சிங்கம். அவனுக்கு வாழ்க்கையே அன்புமயமாயிருந்தது; கைங்கரியமே இன்பம். ஐயோ நான் எப்படி அழாமலிருப்பேன்? கசன் சென்ற வழியே எனக்கும் வழி! உண்ணேன்! உறங்கேன்! இனி உயிர் தரியேன்'' என்று கதறினாள்.

சுக்கிரர்:—“குற்றமற்றவனான என் சிஷ்யனைக் கொல்லுகிற இந்த அசுரர் எனக்கே விரோதிகளாகின்றனர். மேலும் கொலைக்கு இவ்வுலகத்தில் நிவிருத்தியுண்டோ?'' என்றெண்ணிக் கோபங் கொண்டு மந்திரத்தைச் சொல்லி, கசனைக் கூப்பிட்டார். வித்தையின் பலத்தினால் உணர்ச்சி பெற்ற சீடன் குருவினிடம் பயபக்தியோடு, அவர் வயிற்றிலிருந்து மெல்ல "பகவானே! வந்தனம் செய்கிறேன். புத்திரனாகவே என்னை அபிமானித்து என்மீது அநுக்கிரகஞ் செய்யக்கடவீர்!'' என்றான்.

சுக்கிரர்:—பிராமணா, நீ என் வயிற்றிலிருக்கிறாய்; எப்படி வந்தாய்? சொல்!

கசன்:—உங்கள் அநுக்கிரகத்தாலும் தேவயானியின் தெய்வீக அன்பாலும்பிழைத்தேன் நடந்ததெல்லாம் எனக்கு நினைவிலிருக்கின்றன. அசுரர்கள் என்னை எரித்து நீறாக்கி, சாம்பலை மதுவிற்

கலந்து உங்களுக்குக் கொடுத்தார்கள். தேவரீர் இருக்கும்போது, எனது பிரமசரிய விரதத்தை, அழிக்கவல்லவர் யார்?

சுக்கிரர்:—பெண்ணே! இப்போது உன்விருப்பத்தைச் சொல். நான் இறந்தால்தான் கசனுக்குப் பிழைப்புண்டாகும். தேவயானி! என் வயிற்றிலிருக்கிற கசன் என் வயிற்றைப் பிளந்தாலல்லது தோன்றமாட்டான்.

தேவயானி:—(வழியுங்கண்ணீரோடு) ஐயா! உமக்கழிவு நேர்ந்தாலும் சரி; கசனுக்கு நாசம் வந்தாலும் சரி; இரண்டு துக்கங்களும் என்னைத் தகித்துவிடும். நீர் இறந்தால் எனக்குச் சுகமில்லை. கசன் போய்விட்டால் நான் பிழைத்திருக்க முடியாது. எனது வாழ்க்கையில் இன்பக் கொடுங்கனலாய் எதிர்ப்பட்ட கசனை நான் காணமலிருக்க முடியாது.

சுக்கிரர்:—பிருகஸ்பதி புத்திர, உனக்குக் காரியம் சித்தியாயிற்று. நீயும் தேவயானியிடம் அன்புள்ளவளாயிருக்கிருய். இதோ! நீ சஞ்சீவினி வித்தையைப் பெற்றுக்கொள். குழந்தாய்! நீ என் சரீரத்திலிருந்து வெளிவந்து என்னைப் பிழைப்பிக்க வேண்டும். உன்னை என் புத்திரனுகவே கருதுகிறேன்.

கசன் அந்த க்ஷணத்திலேயே சுக்கிரர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு சுக்கிலபக்ஷத்தின் கடைசியான பௌர்ணமியில் புறப்படும் சந்திரன் போல் வெளிவந்தான். இறந்துகிடந்த ஆசிரியனை வித்தையினால் எழுப்பினான் வித்தையைப் பெற்றுக்கொண்ட அகமகிழ்ச்சியோடு குருவை வணங்கினான்; "வித்தையென்னும் அமிர்தத்தை எந்த ஆசிரியர் செவிகளிற் பிழிகின்றாரோ, அவரே சிஷ்யனுக்குத் தாயுந்தந்தையுமாவர். உண்மை நிதியாகிய வித்தையைத் தங்கள் திருவடிகளில் பெற்ற அடியேன் தங்களை ஒருபோதும் மறவேன். வித்தையைப் பெற்றுக்கொண்டு குருவை எவர்கள் பூஜிக்கவில்லையோ, அவர்கள் புகழ் அழியும். பாபலோகங்களுக்கும் அவர்கள் ஆளாவார்கள்" என்று துதித்தான்.

அப்போது மஹானுபாவரான சுக்கிராசாரியர், "மதுபானத்தினால் ஏமாந்து உணர்விழந்தேன். எவன் அறிவின்மையால் மதுபானம் செய்வானோ, அவன் மதிகெட்டுத் தர்மம்விட்டு இம்மையிலும் மறுமையிலும் இகழகப்படுவான்" என்றார்; அசுரர்களை யழைத்து "மூடர்களே! உங்கள் மூடத்தனத்தினாலே கசன் காரிய சித்தி யடைந்தான். அவன் மஹாத்மா. தேவர்களுக்காகச் செய்தற்கரிய செய்கையைச் செய்தான்.

தேவர்கள் அவலம் நீங்கிப் புகழில் உயர்வார்கள்" என்று சொன்னார்.

அசுரர்கள் பெருவியப்புற்றுப் பெருமூச் செறிந்தனர். பிரமசரிய விரதம் முடிந்து நீராடிக் குருவிடம் விடை பெற்றுக்கொண்டு கசன் தேவலோகம் செல்ல விரும்பினான். புறப்படுகையில் தேவயானி குறுக்கிட்டு, "ரிஷி புத்திரனே! ஒழுக்கத்தினாலும், கல்வியினாலும், தவத்தினாலும், குலத்தினாலும் நீ சோபிக்கிறாய். நீ பிரமசரிய விரதத்திலிருந்து நியமந்தவறு திருக்கையில் நான் எப்படி நடந்துகொண் டேன்? அப்படியே விரதம் நிறைவேறியது. நீ அன்புள்ள என்னிடம் வைத்த அன்பிற்கு அறி குறியாகச் சாஸ்திர முறைப்படி என்னைக் கைப்பற் றிக் கொள்வாயாக." என்றாள்.

கசன்:-குற்றமற்றவளே! உனது பிதா எனக்கு எப்படியோ, அப்படியேதான் நீயும். இன்னும் அதிகமாகவும் நீ எனது அன்பிற்கும் உரியவள். ஆசாரியாருக்கு உயிரைவிட அதிகப்பிரியமான வளே! அன்புள்ளவளே! என்னை நீ இவ்வாறு விரும்புவது தகாது.

தேவயானி:—நீ அங்கிரஸின் பேரன். ஆத லால் எனக்கும் பூசிக்கத்தக்கவன். ஆதி தொடங்கி

உன்னிடத்தில் நான்வைத்த மெய்யன்பை நீ இப்போது நினைக்கவேண்டும். அசுரர்களால் பல முறை நீ வதஞ் செய்யப்பட்ட காலத்தில் காதலால் நான் காட்டிய சினேகிதத்தை நீ மறந்துவிட்டாயோ? ஐயோ புருஷர்கள் வன்னெஞ்சர்! எவ்வளவு சீக்கிரத்தில் சினேகத்தையும் உபகாரத்தையும் மறந்துவிடுகிறார்கள்? தர்மந் தெரிந்தவனே! பற்றுள்ளவளும் குற்றமற்றவளுமாகிய என்னை நீ கைவிடத்தகாது” என்றாள்.

**கசன்:**—தேவயானியே! ஏவத்தகாத காரியத்தில் என்னை ஏவுவது அழகன்று; அறமன்று. என் விஷயத்தில் நீ தயைசெய்ய வேண்டும். எனக்கு நீ குருவுக்கும் மேலான குரு. இனியவளே!கோபமுள்ளவளே! உன் தந்தையாகிய சுக்கிரர் வயிற்றுள் நானும் வசித்திருக்கிறேன். தர்மப்படி எனக்கு நீ சகோதரி. எனக்கு உன்மீது கோபமில்லை; வெறுப்பில்லை; அன்பு என்பதுமில்லை. உன்னிடத்தில் நான் விடைபெற்றுக் கொள்கிறேன். எனக்கு வழியில் க்ஷேமத்தை விரும்புவாய். தர்மத்திற்கு விரோதமின்றி, அன்பு ததும்பும் உன் இதயத்தே அடியேனுக்கும் இடந்தருவாய்! தவறின்றிச் சோம்பலின்றி என் ஆசாரியரும் உன் தகப்பனருமாகிய சுக்கிரருக்குப் பணிவிடை செய்யக்கடவாய்!

**தேவயானி:**—(மகாகோபமும் கொடுமையும் உள்ளவளாய்) தர்மத்தையே ஆதாரமாகவுடைய எனது காதலால் தூண்டப்பட்டு உன்னையே அடைக்கலமாக அடைந்த ஏழையை நீ கைவிடு வாயானால், இவ்வித்தை உனக்குப் பயன்பெறாது.

**கசன்:**—நான் குருபுத்திரியென்று உன்னை நேசிக்கிறேன்; வழிபடுகிறேன். இஷ்டப்படி நீ இன்னமும் என்னைச் சபித்துக் கொள்ளலாம். நீ எனக்கு 'வித்தை பயன்பெறாது' என்றாய். அப்ப டியே இருக்கட்டும். நான் யாருக்குக் கற்பிக்கிறே னோ அவனுக்கு வித்தை பலிக்கு மன்றோ?" என்று சொல்லிக் கசன் சென்றான்.

"தேவர்களுக்கெல்லாம் நன்மையான பெரிய காரியத்தை நீ செய்ததனால், உன்புகழ் அழியாது நின்று நிலவும்" என்று இந்திரன் வாழ்த்தினான். தமது மகனது அரிய செய்கையைக் கேட்ட பிருகஸ்பதி, ஈன்ற பொழுதைவிட அதிகமாக மகிழ்ந்தார்.

---

## தேவயானியும் சர்மிஷ்டையும்

'சைத்ராதம்' என்று பெயருள்ள ஒரு வனத் தில் சில பெண்கள் விளையாடிக்கொண்டிருந்தார் கள். அவர்களில் தேவயானிக்கும் சர்மிஷ்டைக்

கும் ஒரு விவாதம் உண்டாயிற்று. அது விளையாட்டாய்த் தொடங்கி வினையாய் முடிந்தது.

தேவயானி, அசுரர் குல குருவாகிய சுக்கிராசாரியர் புத்திரி. சர்மிஷ்டை, அசுரராஜனாகிய விருஷபர்வாவின் பெண். "நீ அசுரப்பெண். உன் தகப்பன் என் தந்தையின் சிஷ்யன். நீயும் என் சிஷ்யையாயிருக்கவேண்டும். எனக்கு மரியாதையாகப் பணிவிடை செய்யவேண்டும். மரியாதையை விட்டால் உனக்கு நன்மை எப்படி உண்டாகும்?" என்று தேவயானி சர்மிஷ்டையை நோக்கி வேடிக்கையாகச் சொன்னாள்.

அதற்குச் சர்மிஷ்டை, "ஏழைப் பிராமணன் பெண்ணாகிய உனக்கும் வாயா? என் தந்தை வணங்காமுடிமன்னன் என்பதை அறியாயோ? நாங்கள் தானம் வாங்குவதில்லை. அடீ பிச்சைக்காரி. உனக்கு இவ்வளவு அகந்தையா?" என்று கோபங்கொண்டு தேவயானியைக் கிணற்றிலே தள்ளிவிட்டுப் பட்டணம் போய்ச்சேர்ந்தாள்.

இச்சமயம் யயாதிமன்னன் வேட்டையாடிக்கொண்டு தாகத்துடன் அவ்விடம் வந்தான்; ஜலமில்லாத அக்கிணற்றில் அக்கினி ஜ்வாலையைப் போன்ற கன்னிகையைக் கண்டான். தெய்வப் பெண்போன்ற வடிவழகுள்ள தேவயானியை மிகவும் அழகான இன்சொல்லினால் தேற்றிக் கொடி

களும் புற்களும் மூடியிருந்த கிணற்றிலிருந்து, சிவந்த நகங்களும் விரல்களுமுள்ள அவளது வலக்கையைப் பிடித்துத் தூக்கிவிட்டான்.

பிரகாசமான ரத்ன குண்டலங்களைத் தரித்த அந்தயுவதி துக்கத்தினுல் பெருமூச்சுவிட்டாள்.

**யயாதி:**—நீ யாருடையபெண்? கிணற்றில் எப்படி விழுந்தாய்?

தேவயானி நடந்ததை யெல்லாம் எடுத்துக் கூறினுள். அரசன் தான் இன்னுனென்று தெரிவித்துவிட்டு அவளிடம் விடைபெற்றுத் தன் நகரஞ் சென்ருன்.

அரசன் சென்ற பிறகு தேவயானியும் ஒரு மரத்தடியில் அழுதுகொண்டு நின்ருள். சுக்கிராசாரியார் பெண்ணைத் தேடிப்பார்க்கும்படி ஒரு தாதியை அனுப்பினுர். அவள், தேவயானி தோழிமார்களோடுகூட விளையாடுகிற இடங்களிலெல்லாம் போய்த் தேடிப்பார்த்துக் கடைசியில் கண்டாள்; "என் அன்பே! என்ன சமாசாரம்? நடந்ததென்ன? உடனே சொல். தந்தை உன்னை நினைத்துத் தளர்ச்சியுற்றிருக்கிருர்" என்ருள்.

விசனத்தால் கொதிப்புற்றவளாய்த் தேவயானி, சர்மிஷ்டை செய்த பிழையைத் தெரிவித்து, "தாதியே! நான் இனி விருஷபர்வாவின் நகரத்

தில் அடியெடுத்து வைக்கமாட்டேன். இதை என் தந்தைக்கு உடனே சொல். விரைவாகப்போ!" என்று கட்டளையிட்டாள். வேலைக்காரி, சுக்கிரா சாரியிடம் வந்து தேவயானி சொன்னதையெல் லாம் சொன்னாள்.

சுக்கிராசாரியர், துக்கத்துடன் வனம்போய்த் தேவயானியைக்கண்டு இருகைகளாலும் தழுவிக் கொண்டு, "கண்ணே! ஜனங்கள் சுகம் அடைவ தும், கஷ்டம் அடைவதும் குற்றங்களாலும், குணங்களாலுந்தான். உன்னிடத்தில் ஏதோ பிழை யிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்" என்று சொன்னார்.

அப்படிச் சொன்னவுடன், தேவயானி, "நான் என் பிழையை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் விருஷபர்வாவின் பெண் சர்மிஷ்டை என்னைச் சொன்ன சொல்லை எப்படி உம்மிடம் கூறு வேன்? அசுரர்களிடம் யாசித்து வயிறு வளர்ப் பவர் என்று உம்மை அவள் நிந்திக்கிறாளே; அது நிஜமா? 'நீ, அசுரரைத்துதித்து அவர்கள் முன் கையேந்தி வாழும் ஏழைப் பிராமணன் பெண்; நானோ வணங்காமுடியனும், துதிக்கப்படுபவ னும், கொடுப்பவனும், கையேந்ாதவனுமாகிய அரசன் புத்திரி' என்று கடுமையும் சூடுமான பேச்சைப்பேசி, என்னை மிகவும் இகழ்ந்து, ஜன

மில்லாத இக்காட்டில் கிணற்றில் தள்ளிவிட்டாள்" என்று கூறிப் புலம்பினுள்.

அது கேட்டு, சுக்கிராசாரியர், "நீ யாசிப்பவனுடைய பெண் அல்ல. உன் தந்தை பிறரைத் துதிப்பதில்லை; பிறரால் துதிக்கப்படுபவன். நான் என்னைப் புகழ்ந்து கொள்ள முடியவில்லை. என்னுடைய பலம் எல்லோருக்கும் தெரியும். எழுந்திரு. பொறுமையோடு வீடு செல்வோம். 'பொறுத்தார் பூமியாள்வார்' ஜனங்களுடைய நன்மையை விரும்பி, நமது அறிவின் வன்மையை நல்வழிப் படுத்துவதே நமது கடமை" என்று கூறி அவளைத் தேற்றினுர்.

தேவயானி, ஞானியாகிய தன் தந்தையை வணங்கி நின்றுள்.

சுக்கிராசாரியர் :—"தேவயானி! எவன் எப்போதும் பிறர் சொல்லும் நிந்தனையான சொற்களைப் பொறுக்கிறுனே, அவன் உண்மையாகவே ஒரு சுத்த வீரனுவான். அச்சொற்களில் ஏதாவது உண்மையிருந்தால், அதற்கிணங்கத் தன்னைச் செம்மை யாக்கிக் கொள்ளவேண்டும். அவை நீதியற்ற பொய் மொழிகளாகவே யிருந்தால், அவற்றிற்காகக் கவலைப்படுவது வீணை காரியமாகும். இவ்வண்ணம் உணர்ந்து ஒழுகுபவன் இவ்வுலகத்தைப் பொறுமையால் வென்ற வீரனு

வான். குதிரையை ஸாரதி அடக்குவது போல், கோபத்தை அடக்கவேண்டும். பொறுமையை வலிமையாகக்கொண்ட வீரன், பாம்பு பழைய சட்டையை உரிப்பது போல், தன் பழைய அடிமைத்தனத்தை நீக்கிக் கொள்ளுகிறான். எவன் மூளுகிற கோபத்தை அடக்குகிறானோ, எவன் நிந்தனையையும் வந்தனமாகக் கருதி மகிழ்கிறானோ, எவன் பிறர் வருத்தியும் வருந்தாமல் இன்புறுகிறானோ, அத்தகைய வீரன் கருமமே கண்ணாய் உழைத்துக் காரியாஸித்தி பெறுவது திண்ணம். நூறு வருஷகாலம் சோர்வின்றித் தீவளர்த்து, அவி சொரிந்து வேள்வி செய்பவனைக் காட்டிலும், எதற்கும் அஞ்சாத நெஞ்சனாய் எப்போதும் சினத்தீ அவித்துப் பிறர் நன்மை நாடி உழைப்பவனே மேலானவன். காமமும், கோபமும், லோபமும் ஒருவனைச் சண்டாளனாக்கி விடும்; கோபிப்பவனுடைய தானமும், தருமமும், தவமும் பயன் பெறா. கோபம் தன்னையும் நீறாக்கிப் பிறரையும் பீடிக்கும். எவன் கோபத்துக்கு உட்படுவானோ, அவன் துறவியுமாகான்; முனிவனுமாகான்; இல்லறத்தின் பயனையும் அடையான்; அவன் அடிமையே யாவன்; அடிமைத்தனத்தின் பயனையே அடைவன். அத்தகைய அடிமைக்கு விடுதலை இம்மையிலுமில்லை,

மறுமையிலுமில்லை. அவனுக்கு அறமில்லை, ஆண்மையில்லை, உண்மையில்லை, உறவினரில்லை, ஊராரில்லை. அறிவில் சிறுவரே அநாவசிய மாய்ப் பகைத்தீயை வளர்ப்பவர்; கோபித்துக் கொள்பவர்" என்றூர்.

இதைக்கேட்டு, தேவயானி, "பிதாவே! நான் சிறு பெண்ணுயிருந்தாலும் உமது கிருபையால் அறத்தின் சூக்ஷமத்தை அறிவேன்; பொறுமைக் கும், நிந்தனைக்கும் உள்ள பலாபலன்களையும் அறி வேன். ஆனால் தன் கடமையையும் நல்லறத்தையும், முறைமையையும் அறவே கைவிட்டவர்கள் விஷ யத்தில் பொறுப்பது அபிவிருத்தியை நாடு கிறவனுக்குத் தகுமா? ஒழுக்கந் தப்பினவர் களிடம் வஸிப்பது அழகா? குலத்தைப்பற் றிப் பிறரை நிந்திப்போர் கெட்ட புத்தி யுள்ளவர்கள், இவர்களுடைய சகவாசத்தின் புகழை அறிஞன் விரும்பான். மேலும் 'மதியாதார் முற்றம் மிதியாமை கோடிபெறும்' என்பது பழ மொழியல்லவா? தனத்திலும் தன்னடக்கமே சிறந் தது. தன்னடக்க மில்லாதவன் பாவி! ஒழுக்கங் கெட்டவன்! ஒழுக்கங் கெட்டவர்களும் பாவிகளும் தனவான்களா யிருந்தாலும் சண்டாளர்கள்தாம். ஒழுக்கத்தைவிட்டுத் தனம், குலம், வித்தை இவை களில் ஆசைவைத்து வீண்பெருமை பாராட்டு

வோர் சண்டாளரேயாவர். அவர் குருடராய்—கற்றறி மூடராய் - காரணமில்லாமல், நிந்திப்பர்; பகை செய்வர். அவர்களிடம், நாம் பழகுவது சரியா? நன்மையோ, அல்லது தீமையோ, எதில் மனம் பழகுகிறதோ, அதில் அதற்குப்பற்று உண்டாவது நிச்சயம். ஆதலால், அருளும் நீதியும் குடிபுகா நெஞ்சினரான அசுரரோடு வசித்தால் நாமும் நாளடைவில் சண்டாளராவோம்! சர்மிஷ்டையின் கொடிய புன்சொல் என் உள்ளத்தைக் கடைகிறது. நர்விஞல் சுட்டபுண் எளிதில் ஆறிவிடுமோ?" என்ருள்.

பிறகு சுக்கிராசாரியார், விருஷபர்வாவைக் கண்டு "அரசனே! பாபம் உடனே, கைமேல் பலனைத் தராவிட்டாலும், தொடர்ச்சியாகச் செய்யப்பட்டபோது, காலக்கிரமத்தில் பரிபாகமடைந்து வேரும் வேரடி மண்ணுமில்லாமலே வமிச நாசம்செய்து விடும். ஒருவன் தன்னிடத்தும் தன் மக்களிடத்துமுள்ள பாபத்தைக் கவனித்து அதை ஒழிக்கமுயலவேண்டும். கவனிக்காமலிருந்தால், அது, மிகுதியாக உண்ணப்பட்ட உணவைப்போல், நாளடைவில் நிச்சயமாகத் தன் பலனைக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை. பிரபுவே! படிக்கிறவனும், அன்புடன் என் வீட்டில் எனக்குத் தொண்டு செய்தவனுமான ஒரு பிரமசாரியை

முன்னே கொல்வித்தாய். உன் பெண், மான முள்ள என் பெண்ணைக் குரூரமாக விரோதித்து நிந்தித்தாள்; கிணற்றிலுந் தள்ளினாள்; அவள் இங்கே இனி, எப்படி வசிப்பாள்? அவளில்லாமல் நான் எப்படி யிருப்பேன்? தேவயானியின் இருப் பிடமே எனக்கும் இடம்; அவள் விருப்பந்தான் எனக்கும் விருப்பம்” என்று சுக்கிரர் கோபத்து டன் பேசினார்.

இதைக்கேட்டு வியப்படைந்த விருஷபர்வா, “அடியேன் ஒன்றும் அறியேன்! மன்னித்தருள வேண்டும். எங்களுக்கு வேறு ஆதரவில்லை” என் றான்.

சுக்கிரர்:— அசுரனே! என் பெண்ணின் துக் கத்தை நான் தாங்கமுடியாதவன். என்னுயிர் அவளிடத்திலேதா னிருக்கிறது. அவளை நீ சமா தானப் படுத்த வேண்டும்.

விருஷபர்வா:— எனக்கு நீங்களே பிரபு. தேவரீர் ஆணையைச் சிரசின்மேலே கொண் டொழுகுவேன்-என்றான்.

பின் சுக்கிராசாரி தேவயானியிடஞ் சென்று விருஷபர்வா சொன்ன விஷயத்தைச் சொன்னார். விருஷபர்வாவும் தன் சுற்றத்தாருடன் வந்து அவள் அடிகளில் விழுந்து, “தேவயானியே! தயைசெய். உன் தந்தை எப்போதும் என்வந்

தனங்களுக்குரிய ஆசிரியர். நானும் என் குடும்பமும் பரிவாரமும் உங்கள் அடிமைகளே!" என்று சொன்னான்.

தேவயானி:—(சிரித்தமுகத்தோடு) அசுரராஜாவே! நீங்கள் எங்கள் அடிமைகள் என்பது வெற்றுரையன்றாயின், உன் புத்திரி சர்மிஷ்டை, ஆயிரம் கன்னிகைகளுடன் என் அடிமையாயிருக்க நான் விரும்புகிறேன் - என்றாள்.

விருஷபர்வா, "சரி அப்படியே" என்று கூறிச் சர்மிஷ்டையை உடனே அழைப்பித்து, அவளைப்பார்த்து, "அம்மா! தேவயானி எதை விரும்புகிறாளோ, அதை நீ இப்போதே செய்ய வேண்டும்; எங்கும் அவள் பின்னே செல்லவேண்டும். ஒரு குலத்திற்காக ஒருவனை விடவேண்டும். ஒரு கிராமத்திற்காக ஒரு குடும்பத்தை விடவேண்டும். தனக்காக உலகத்தைவிட வேண்டும்" என்றான்.

சர்மிஷ்டை:— (தேவயானியைநோக்கி) நான் ஆயிரம் தாதிகளுடன் உனக்குப் பணிவிடை செய்து வருவேன்.

தேவயானி:— நான் துதிப்பவன்— யாசிப்பவன்-கை நீட்டி வாங்குகிறவன் பெண்ணல்லவா? துதிக்கப்படுகிறவன் பெண்ணாகிய நீ எனக்கு எப்படித் தாதியாகலாம்?

**சர்மிஷ்டை:**—(கோபத்தையும் துக்கத்தையும் அடக்கிக்கொண்டு) துக்கப்படுகிற உறவினருக்கு எப்படியாவது சுகத்தைச் செய்யவேண்டும். ஆதலால் உன்னைப்பின்றொடர்ந்து தாதியாகச் செல்வேன் - என்றாள்.

தேவயானி திருப்தியடைந்து தன்கிரகம் சென்றாள்.

கொஞ்சகாலத்திற்குப்பின், தேவயானி, சர்மிஷ்டையோடும் கன்னிகைகளோடும் முன்போன வனத்திற்கே போய் ஆனந்தமாக விளையாடினாள்.

முன்போல் யயாதி மஹாராஜா, வேட்டையாடிக் களைப்புற்றுத் தாகத்தோடு தற்செயலாக அதே வனத்துக்கு வந்து தேவயானியைக்கண்டு "உன்னுடைய குலத்தையும் பெயரையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; நான் யயாதி என்று பிரசித்தியுள்ளவன்" என்றான்.

**தேவயானி:**—ராஜாவே! சுக்கிராசாரி என்னும் அசுரகுரு இருக்கிறாரே அவரை என்தந்தை என்று அறியும். (சர்மிஷ்டையைச் சுட்டிக்காட்டி) இவள் அசுரராஜாவாகிய விருஷபர்வாவின் பெண்; என்தோழி-என்றாள்.

அரசன், "இவ்வுத்தமி, உனக்குத் தோழியாகவும் தாதியாகவும் இருப்பது எப்படி?" என்று தேவயானியைக் கேட்டான்.

தேவயானி, 'யாவரும் விதியைத் தாண்டுவ தில்லை' என்றுகூறி, சர்மிஷ்டை தனக்குத் தாதியான கதையை எடுத்துச் சொன்னாள்.

நீண்ட சம்பாஷணைக்குப்பின், யயாதி தேவயானியை நோக்கி, "பிரியமானவளே! எனக்கு நீ விடைகொடுத்தருள்வாய்" என்று பிரார்த்தித்தான்.

தேவயானி ஒன்றும் பதிற்பேசவில்லை.

**யயாதி:**—பெண்ணே! நான் உனக்குத் தகுந்தவனல்லேன் என்பதை அறிவேன். உனக்குச் சுகமுண்டாகட்டும்.

**தேவயானி:**—அரசே! எனது கையை நீர் முன்னே பிடித்திருக்கிறீர். அன்றே நீர் என் அகம் தொட்டுவிட்டீர். அன்பராகிய உம்மால் தொடப்பட்ட உறுதியான மனமுள்ள எனது கையை வேறுபுருஷன் எவ்வாறு தொடலாம்?

**யயாதி:**—எனது செல்வத்தோடும், பரிசனத்தோடும் நான் உன் சுவாதீனமாயிருக்கிறேன். நீ எனக்குத் தோழியாகவும் அரசியாகவும் இருப்பாய். ஆனால் தீயைக்காட்டிலும், சுக்கிராசாரியர், மிகவும் நெருங்கமுடியாதவர். உன்தந்தை உன்னைக் கன்னிகாதானஞ் செய்யாமல், நாம் எப்படி விவாகம் செய்துகொள்வது?

**தேவயானி:**—நீர் என்னால் சிநேகிதராகவும் புருஷராகவும் வரிக்கப்படுகிறீர்; நானும் உம்மால்

தோழியாகவும் தர்மபத்தினியாகவும் வரிக்கப்பட்டேன். நம்முடைய சுத்தமான மெய்யன்பை அறிந்து என்தந்தை கொடுத்தபின் நீர் என்னை மணஞ்செய்து கொள்ளும்—என்றுகூறித் தந்தைக்குச் செய்தியனுப்பினாள். சுக்கிராசாரியர் ராஜாவின் முன்னே வந்து நின்றார்.

யயாதி சுக்கிரரை வந்தனஞ்செய்து கைகூப்பி வணங்கினான்.

தேவயானி:—பிதாவே! இந்த ராஜா ஆபத்தில் என் கையைப்பிடித்துக் காப்பாற்றினார்; அன்றே எனது அன்பிற்கு உரியவரானார். இவ்வுலகிலேனும், வேறு எவ்வுலகிலேனும் நான் வேறுபதியை வரிப்பதில்லை.

சுக்கிரர்:—(யயாதியை நோக்கி) வீரனே! எனது செல்வமான இவளை உனக்கே தானமாகக் கொடுக்கிறேன். நீ ஆண்மையினாலும் பேரன்பினாலும் இப்பெண்மணிக்கு உரியவனானாய். நீ இச்செல்வத்தை அங்கீகரித்து அகத்தணிந்து சீர் பெற்று வாழ்வாய். அரசனே! இந்த அரசிளங்குமரியாகிய சர்மிஷ்டையும் உன்னால் எப்போதும் கௌரவிக்கத் தக்கவள். உனக்குப் பேரும்புகழும் உண்டாகும்! நீ நினைத்ததையெல்லாம் அடைவாய்—என்றார்.

யயாதி சுக்கிரரைவணங்கி, சாஸ்திரவிதிப்படி சுபமுகூர்த்தத்தில், தேவயானியை மணம் செய்து கொண்டான். அவளோடு நிரம்பின பொருளையும் சர்மிஷ்டை முதலிய தாதியரையும் சுக்கிரரிட மிருந்து பெற்றுக்கொண்டான்.

தேவயானி, அரசர்பிரானது முடிமணியென விளங்கினுள். அவர் அநுமதியின்படி, சர்மிஷ்டை அசோகவனிகை யென்னும் சிங்காரவனத்தி லுள்ள மாளிகையில் வசித்தாள். ஆயிரம் வேலைக் காரிகளாற் சூழப்பட்ட அவளை, அரசன் செவ்வை யாகக் கௌரவித்து வந்தான்.

யயாதியும் தேவயானியும் ஆனந்தமாய் இரண் டுடலும் ஒருயிருமாக வாழ்ந்திருந்து குமாரனைப் பெற்ருர்கள்.

அநேகவருஷகாலம் கடந்தபின், ஒருநாள் அரசன் சர்மிஷ்டையைச்சந்தித்தான். அப்போது அவளைப் பார்த்து "பெண்ணரசே! தேவயானி யுடன் உன்னையும் சாஸ்திர விதிப்படி மணஞ் செய்துகொள்ள விரும்புகிறேன். தேவயானியுடன் கூடவே இவளும் பூசிக்கத்தக்கவள்; போஷிக்கத் தக்கவள் என்று சுக்கிராசாரியார் சொல்லியிருக்கிரு ரல்லவா? என்று கூறினுன்.

சர்மிஷ்டையும் சரியென்று சம்மதித்தாள். பின் அரசன் சுபதினத்தில் சர்மிஷ்டையைக் கலி

யாணஞ் செய்துகொண்டான். பின் யயாதி, யது, துர்வசு என்னும் இரண்டு புத்திரர்களைத் தேவ யானியிடம் பெற்ருன். சர்மிஷ்டையிடம் த்ருஷ்யு அனு பூரு என்னும், மூன்று குமாரர்களைப் பெற் ருன். அப்போது தேவயானி சர்மிஷ்டை மீது பொருமைகொண்டு கண்ணும் கண்ணீருமாகச் சுக்கிராசாரியிடம் சென்று அவரைக்கண்டு நமஸ் காரஞ்செய்து அவர் முன் நின்ருள். யயாதியும் பின்ருெடர்ந்து சுக்கிராசாரியரை வணங்கினுன்

சுக்கிரர் உண்மையை அறிந்துகொண்டு தம் பெண்ணின் நிலையைக் கருதி இரங்கி யயாதியைக் கோபத்தோடு நோக்கி, "வேந்தே, உன்னை விரை வில் மூப்பு மூடிக்கொள்ளும்" என்று சபித்தார்.

யயாதி—பகவானே! அசுரராஜன் பெண் ணும் உம்மாலேயே எனக்குக் கொடுக்கப்பட்டாள். ஆதலினுல் நான் அவளை மணந்தேன். பிராம ணரே! அடியேன் செய்ததை அறமென்று நினைத்து என் விஷயத்தில் பொறுமைகொள்ள வேண்டும்-என்ருன்.

சுக்கிராசாரியார்:—அரசனே! நான் பொய் சொல்வதில்லை. இதோ நீ இளமைப் பருவத்தை விட்டு மூப்பை அடைந்திருக்கிருய். ஆனுல் உனக்கு விருப்பமிருந்தால் இந்த மூப்பை

வேருெருவனிடம் நீ மாற்றிக்கொள்ளலாம் என்று அநுக்கிரகம் செய்தார்.

யயாதி:—என்புத்திரர்களில் எவன் தன்வயதை எனக்குக் கொடுப்பானே, அவன்தான் புண்ணிய முள்ளவனுகவும் புகழுள்ளவனுகவும், ராஜ்யத் திற்குரியவனுகவுமிருப்பான்; அதற்கு நீங்கள் அநுமதிகொடுக்கவேண்டும்.

சுக்கிரர்:—மனதினுல் என்னைத் தியானஞ் செய்து மூப்பை உன் இஷ்டப்படி மாற்றலாம். உனக்குப் பாவம் வராது - என்று கூறியனுப்பினுர்.

யயாதி, நகரஞ்சேர்ந்து மூத்தவனுன யதுவென்னும் புத்திரனை நோக்கி, "குழந்தாய்! சுக்கிராசாரியருடைய சாபத்தினுல், நான் மூப்பையடைந்தேன். யதுவே! உன்னுடைய இளமையை எனக்குத்தந்து என்மூப்பை நீ வாங்கிக்கொள். உன் சந்ததி வாழையடிவாழையாகப் புகழ்பெற்று விளங்கும்" என்று சொல்ல, யது 'மாட்டேன்' என்று மறுத்துவிட்டான்.

யயாதி மஹாராஜன், "குழந்தாய்! என் இதயத்திலிருந்து அன்பின் அறிகுறியாய்த் தோன்றிய நீ ஏன் ஆணையை மறுத்துப் பேசினுய்! உன் சந்ததிராஜ்யத்தை யடையாமலே போகும்" என்றுன்.

பிறகு துர்வசுவை அரசன் வேண்டிக்கொண்டான். அவன், "நான் மூப்பை விரும்பவில்லை. உமக்கு என்னிலும் அதிகப்பிரியமான புத்திரர்கள் இருக்கின்றனர்" என்று சொன்னான். பின் அரசன் "மூடனே மிருகத்தன்மையுள்ள மிலேச்சர்களுக்கு நீ ராஜாவாவாய்" என்று சபித்தான்.

இவ்வாறு சபித்து யயாதி, சர்மிஷ்டையின் புத்திரனாகிய த்ருஷ்யுவை வேண்டினான். அவனும் உடன்படவில்லை.

தந்தை சொல் தட்டாதவனான பூருமனத்தில் கபடமின்றி, "உமது சொல்லே எனக்கு மந்திரம். தந்தையே! நீர் எதைச்சொல்லுகிறீரோ, அதைச் செய்வேன்" என்று சொன்னான். அரசன் சந்தோஷம் அடைந்து, சுக்கிரரைத் தியானித்து, "குழந்தாய்! இதை உனக்குக்கொடுக்கிறேன்" என்று பூருவினிடம் மூப்பைக்கொடுத்தான்.

பிறகு, யயாதி பூருவின் இளமையை அடைந்து உருவமும் ஆண்மையும் நிரம்பிய குமாரனானான்; விருப்பத்துக்கும் உற்சாகத்துக்கும் விரோதமில்லாத சுகங்களை அநுபவித்தான். அன்புடன் கூடிய உபகாரங்களினால் ஏழைகளையும், உபசாரங்களினால் விருந்தினர்களையும், தயையினால் பரிசனங்களையும், தர்மத்தினால் எல்லா ஜனங்களை

யும் மகிழ்வித்தான். நீதிதவருமல் ராஜ்யபரிபால னஞ் செய்தான்.

ஆண்சிங்கம்போன்ற அவ்வரசன் குறித்த காலம்பூர்த்தியானதை நினைந்து பூருவைப்பார்த்து "புத்திரனே! விருப்பமானது, விரும்பின வற்றை அநுபவிப்பதனுல் அடங்குவதில்லை; நெய்யால் தீ விருத்தியாவதுபோல, விருத்தியா கிறது. ஆதலால் ஆசையை அடக்கவேண்டும் என்பர் அறிஞரான பெரியோர். உடம்பு தளர்ச்சி யடைந்தாலும், ஆசைதளர்ச்சியடைவது அரிது. ஆசை, உயிருள்ளவரையிலுமுள்ள ஒரு பெரிய நோயாம். ஆசையை வென்றவனே சுத்தவீரன்; போர்த்தொழிலில் வெற்றிபெறுகிறவன் அல்லன். ஆசையை வென்றவனுக்குத்தான் ஆநந்தம். சுகங்களில் ஆசை ஒவ்வொருநாளும் புதிதாக உண் டாகிறது. ஆதலால் இரண்டைவிட்டு ஒன்றையே பற்றவேண்டும் என்பர் அறிஞர். நான், எனது என்றபற்றை யொழித்து, எம்பெருமான் திருவடி மலர்களையே நான் பற்றி ஒழுகுவேன்; பூருவே! உன்னிடம் சந்தோஷம் அடைந்தேன். உனது இளமையையும் எனது ராஜ்யத்தையும் நீ பெற் றுக்கொள். உனக்குப் புகழ் உண்டாகக்கடவது" என்றான்.

அப்போதே யயாதிராஜன் மூப்பை அடைந் தான். பூருவும் இளமையை அடைந்தான். அர

சன் பூருவுக்கே முடிசூட்டக்கருதினான்.

ஆனால் மஹாஜனங்கள், "முதற்பிள்ளையாகிய யதுவையும், அவனுக்குப் பின்பிறந்தவர்களையும், தாண்டிக் கடைசிப்பிள்ளை ராஜ்யத்திற்கு எவ்வாறு உரியவன்?" என்று அரசனை நோக்கிக் கூறினர்.

அரசன் ஜனங்களைச் சமாதானம் செய்தான். "தந்தைக்கு விரோதமாக நடப்பவனைப் புத்திரன் என்று பெரியோர்கள் நினைக்கவில்லை. தாய்தந்தையர் சொற்படி நடப்பவன் எவனோ அவன்தான் புத்திரன். துஷ்டனும் திருடனும் புத்திரனென்று சொல்லப்படுவதில்லை. பூரு என்னை விசேஷமாகக் கௌரவித்தான்; அறிவாலும் ஆண்மையாலும் அன்பாலும் அருளாலும் ஒத்திருக்கும் புத்திரன் பூருதான். ஆகையினால் அவனே அரசனாதற்குரியவன்" என்றான்.

நகரமாந்தரும், தேசத்து ஜனங்களும் திருப்தியுடன் அங்கீகரித்தபின், யயாதி பூருவுக்கு முடிசூட்டினான். இதர புத்திரர்களை ராஜ்யத்தின் எல்லைக்கோடிகளிலே அதிகாரியாக நியமித்து, தவஞ்செய்ய வனஞ்சென்றான்.

---

## வாழ்க்கையின் பயன்.

இலைகளையும் கனிகளையும் தின்று, மனிதசஞ்சாரமற்ற காடுகளிலிருந்து யயாதி கடுந்தவம் புரிந்

தான்; பரிசுத்தமான மனத்தோடு, புலன்களை அடக்கியவனாய் நீண்டகாலம் தவம்புரிந்தான். இவன் தவம் இந்திரலோகத்திலும் வியாபித்தது. பின்பு அரசன், தனது அரியதவத்தின் பயனாகத் தேவபோகத்தை அடைவதற்குப் பாத்திரமானான்.

அப்போது யயாதி புருவை யழைத்து, "மகனே! நீ அரசன்; கங்கைக்கும் யமுனைக்கும் நடுவிலுள்ள தேசத்திற்குக் காவலன். நீ கோபத்தையும், பொறுமை, கபடம், பகை இவைகளையும் அறவே ஒழிக்க முயலவேண்டும். கற்றோரையும், பெரியோரையும் ஒருபோதும் அவமதிக்கலாகாது. சக்தியுள்ளவன் எப்போதும் பொறுப்பான்; சக்தியில்லாதவன் கோபிப்பான். தீயோர் நல்லோரை நிந்திப்பார். பலமில்லாதவர் மிகுந்த பலமுள்ளவரை வெறுப்பர். அழகில்லாதவர் அழகுள்ளவரை விரோதிப்பர். தனமில்லாதவர் தனமுள்ளவரைப் பகைப்பர். குணமில்லாதவர் குணமுள்ளவர்களைக் கோபிப்பர். அரசன் விருப்பு வெறுப்பின்றி, தன்தருமத்திலேயே மனம் வைத்தவனாக, உலகமறிந்து, வாழவேண்டும். கோபிக்கிறவனிலும் கோபியாதவனே பலவான்; சினம் சேர்ந்தாரைக் கொல்லும். பொறுமையில்லாதவனிலும் பொறுமையுள்ளவன் பலவான்; அரசன் வாக்கையும் மனத்தையும் கட்டவேண்டும்; யோக்கியர்க

ளால் திருத்தப்படவேண்டும். அரசன் வில்லம்பைப் போலவே சொல்லம்பையும் ஜாக்கிரதையாகத்தான் பிரயோகிக்கவேண்டும். கருணையும், நேசமும், கொடையும், இன்சொல்லும்போல் ஜனங்களை வசப்படுத்துவது வேறில்லை. ஏழை அழுதகண்ணீர், கூரிய வாளாய் ராஜவம்சத்தையே அழித்துவிடும்'' என்று புத்திமதி கூறிப் பின் அழகான புண்ணியலோகங்களில், சிறந்த தேவர்களுக்கு ஒப்பான மகிமையையும் ஒளியையும் அடைந்து, அமுதமயமான இன்பத்திலாழ்ந்து, நினைத்தபடி நெடுங்காலம் சஞ்சரித்தான்.

இப்படியிருக்கையில், யயாதி தான், இம்மையில் சேகரித்திருந்த தபோதனம் முழுதும் செலவானபிறகு, தேவலோகத்து நந்தவனத்தில், தேவ போகத்தில் அதிகமாகப் பற்றுள்ளவனானன். தேவேந்திரன் அவனை அழைத்தான்.

அரசன் இந்திரனிடம் போனான். பேச்சுகளின் முடிவில் இந்திரன், "அரசே! இல்லறத்தைவிட்டுக் காடு சென்று தவம் புரிந்தாய். யயாதியே! உன்னைக்கேட்கிறேன். உண்மையைச்சொல். தவத்தில் நீ யாருக்கு ஒப்பானவன்?'' என்று கேட்டான்.

அரசனுக்குஅகங்காரம் தலைக்கேறிவிட்டது. அவன் மதிமயங்கி, "இந்திரனே! ரிஷிகளிலும்,

மனிதர்களிலும், தேவர்களிலும் தவத்தில் எனக்கு ஒப்பானவன் ஒருவனையுங் காணவில்லையே!" என்று பிதற்றினான்.

"அரசனே! உனக்கு வெட்கமில்லையா? இப்படி வீண்பெருமை பாராட்டிக் கொள்ளலாமா? மேலானவர்களையும், சமானர்களையும், தாழ்வானவர்களையும், முன்பின் யோசியாமலே, அவர்களின் நிலையையும் பெருமையையும் அறியாமலே, நீ அவமதித்தாய்! வீண்பெருமையால் ஒளி குன்றி, புண்ணியம் அழிந்து இப்போதே விழுவாய்!" என்று இந்திரன் சொன்னான்.

அப்போது உக்கிரமான உருவமுள்ள தேவதூதனொருவன், யயாதியைப்பார்த்து உரத்த குரலாக 'அழிந்துபோ!' என்று மும்முறை கூற, யயாதி உடனே அங்கிருந்து கீழே விழுந்தான். அப்படி அவன் விழுவதைக் கீழேயிருந்த சாதுக்கள் கண்டார்கள். அவர்களுட் சிறந்தவனாகிய அஷ்டகன் என்பவன் "மேகமண்டலத்தைக் கிழித்துக்கொண்டு, விழுகிற நீ யார்? யாரைச் சேர்ந்தவன்? என்னகாரணத்தினால் இங்குவருகிறாய்? பிரபுவே, உன்னை எதிர்கொண் டழைக்கிறோம். சாதுக்களுக்குத் தம்மிடம் தேடி வந்தவனை அதிதியே பிரபு! பயத்தையும், துக்கத்தையும், மயக்கத்தையும் விட்டுவிடு" என்றான்.

யயாதி நான் எல்லாப் பிராணிகளையும் அவ மதித்த தோஷத்தினால், விழுகிறேன்; தவத்தை நம்பி, சாதுசங்கத்தைத் துறந்தேன். நல்ல கருமங்களுக்குப் பாவம் விரோதி யென்பர். பாவம் விசேஷமாக வீண்பெருமை யுள்ளவனிடமே காணப்படுகின்றது. சாதுக்களின் சேர்க்கை, நல்ல கருமங்களுக்கு இன்றியமையாத சாதனமாகும். எனக்கு மிகுந்த தபோதனமிருந்தது; புண்ணியமும் போய்விட்டது. தனத்தினால் ஒருபோதும் சந்தோஷம் அடையக் கூடாது. அகங்காரத்தை விடவேண்டும். இவ்வுலகத்தில் தனமில்லாதவனை நண்பனாயிருந்தாலும், தன்மனிதனாகவே யிருந்தாலும், எப்படி மனிதர்கள் விட்டு விடுகிறார்களோ, அப்படியே அவ்வுலகத்தில் தபோதனத்தையும், புண்ணியத்தையுமிழந்த ஏழையேனை இந்திராதிதேவர்களனைவரும் கை விட்டார்கள். இன்பத்தை எய்தும்பொருட்டாகவே, மனிதர் பொருள் தேடுகிறார்கள்; கல்விச் செல்வத்தைத் தேடுகிறார்கள்; அரசாள்கிறார்கள்; களவுசெய்கிறார்கள்; கொலைசெய்கிறார்கள்; ஆடுகிறார்கள்; பாடுகிறார்கள்; உழுகிறார்கள்; சிரிக்கிறார்கள். யானும் இன்பமடையும் நோக்கங்கொண்டே தவங்கள் செய்தேன்; மண்ணில் விழுந்தேன்; ஆயினும் நல்லவர்கள் மத்தியில் விழுவதை நாடினேன் நற்குண சம்பன்னர்களாக நீங்கள் சேர்ந்திருக்கிறீர்

களே. இக்காட்சி யின்பத்தைத் தவிர யான் இனி இந்திரபோகமும் வேண்டேன்” என்றான்.

அஷ்டகன்:—அரசனே! என் புண்ணியங்களையெல்லாம் உனக்கே கொடுக்கின்றேன். மரணத்தின்பின் எனக்குள்ள மேலுலகங்களெல்லாவற்றையும் உனக்குத் தானஞ் செய்கிறேன். நீ விழாதே!—என்றான்.

யயாதி:—“எனக்கு வாங்குவது விருத்தியன்றே! கொள்ளுதல் தீது; கொடுப்பது நன்று! இதுவே என் கொள்கை” என்றான்.

பிரதர்த்தனன்:—“யயாதியே! விழாதே. என்னுடைய புண்ணியங்களையும் உனக்கே கொடுக்கிறேன்” என்றான்.

வசுமான்:—மரணத்தின் பின் எனக்குரிய பதங்களையும் உனக்குக் கொடுப்பேன். விழாதே! என்றான்.

சிபியும் அப்படியே சொன்னான். அரசன் அங்கீகரிக்கவில்லை. தன் லாபத்திற்காகப் பிறர் புண்ணியத்தை விரும்பவில்லை. ஆபத்திலும் இழிவான காரியத்தைச்செய்வது தகாது; வாழ்க்கையின் பயனை நோக்கி, முயற்சியுடன் புகழையும் புண்ணியத்தையும் தரத்தக்க சிறந்த உபயோகமுள்ள கருமங்களையே செய்யவேண்டும் என்பதை நினைத்து, யயாதி “அன்பர்களே! உலகவாழ்க்கையின் பயனை உணர்ந்து ஒழுகவேண்டும். அங்ஙனம் ஒழுகும்

உத்தமர்களைப் பிரியமும் இதமுமான மேலுலகங்கள் எதிர்பார்க்கின்றன. பணிசெய்து கிடப்பதே கடன் எனத்துணிந்து வாழும் உங்களுக்கு முடிவில்லாத நல்லுலகங்கள் காத்திருக்கின்றன. நல்லோர்களான உங்கள் சேர்க்கையால் நானும் மணம் பெற்றேன்'' என்றான்.

அச்சமயத்தில், நற்குண நற்செய்கைகளையுடைய மாதிவி வந்தாள்; யயாதியைப் பிதாவென்று தெரிந்து வந்தனஞ் செய்தாள்.

பிறகு அவள் அஷ்டகன் முதலானவர்களை நோக்கி, "என் அன்புள்ள புத்திரர்களே! இந்த யயாதி என் தந்தை; உங்களுக்கு மாதாமஹர்'' என்றாள். அவர்கள், என்ன காரணத்தினால் யயாதி ஸ்வர்க்கத்தினின்று இங்கே வந்தான் என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு அவனைப் பணிந்து வரவேற்றார்கள்.

அரசன் பரமானந்தம் அடைந்தான். இப்பொழுது 'நீங்கள் ஒன்று சேர்ந்து ஸ்வர்க்கத்தை ஜயித்திருக்கிறீர்கள்!' என்று ஆகாயவாணி முழங்கியது. அவர்களெல்லோரும், தம் புண்ணிய கருமங்களினால் ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து கரையேறினார்கள்.

---

THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

PROCAINE

TETANUS ANTITOXIN

TETANUS TOXOID

X-RAY CONTRAST MEDIA

**FOR RAPID**

**SYMPTOMATIC RELIEF**

**IN ALLERGIC DISORDERS**

*such as*

HAY FEVER

VASOMOTOR RHINITIS

ASTHMA, Etc.

**FOR PROPHYLAXIS OF**

**REACTIONS**

*during*

ANTIBIOTIC THERAPY

ALLERGEN THERAPY

BLOOD TRANSFUSIONS

## REACTIONS

*Anaphylactoid :* 10 to 20 mg. of Piriton Maleate by slow intravenous injection.

*Less severe reactions (urticaria, pruritus, etc.) :* 10 to 20 mg. subcutaneously or intramuscularly.

## DRUG SENSITIVITY

In all cases in which sensitivity to certain drugs is known, or suspected, to exist, 10 mg. of Piriton Maleate should be given, either mixed in the same syringe, if the solutions are compatible, or given subcutaneously or intramuscularly immediately before the injection of the drug.

## DOSAGE

The dosage of Injection of Piriton Maleate is 10 to 20 mg. by intramuscular or subcutaneous injection.

## EMERGENCY THERAPY

In severe allergic manifestations Piriton Maleate should be given in doses of 10 to 20 mg. by slow intravenous injection.

(*For presentation see back cover*)

*A further advance in Antihistaminic Therapy*